பக்கங்கள்: 15

# காலைக்கதிர்
Kalaikkathir

விழியல் 08 | வள்ளுவர் ஆண்டு 2055 | மாசி 25 | வெள்ளிக்கிழமை | 08.03.2024 | கதிர் 122

# சதியைத் தடுக்க முடியாது போனது
## கோட்டாபய ராஜபக்ச தனது நூலில் தெரிவிப்பு

2022ஆம் ஆண்டு மார்ச், ஏப்ரல் மாதங்களில் என்னை ஆட்சியிலிருந்து அகற்றுவதற்காக மூலோபாய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட சர்வதேச, உள்நாட்டு சதியை எதிர்கொள்ள என்னால் முடியாமற்போனது. நான் இன்னும் இரண்டு வருடங்கள் ஆட்சியில் நீடிப்பதற்காக ஓர் உயிரையேனும் இழப்பது அர்த்தமற்ற செயலாக இருந்தது. என்று முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ நேற்று வெளியிட்ட தனது நூலில் தெரிவித்துள்ளார்.

'ஜனாதிபதி பதவியிலிருந்து என்னை அகற்றுவதற்கான சதி' என்ற பெயரில் அவர் வெளியிட்ட நூலில் குறிப்பிட்ட முக்கிய விடயங்கள் வருமாறு: ☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!

அமெரிக்காவின் அதிபராக இருந்தவர் டொனால்ட் ட்ரம். அங்குள்ள ஊடகங்களால் அமெரிக்க ஜனநாயகப் பாரம்பரியத்தின் எதிரியாகச் சித்தரிக்கப்பட்டவர். அவரளவிற்கு ஊடகங்களால் 'ரோஸ்ட்' செய்யப்பட்டவர் இதற்கு முன்னர் வேறு யாராவது இருந்திருப்பார்களா என்று தெரியவில்லை. அமெரிக்காவின் அடித்தளத்தையே, விழுமியங்களையே அசைத்து, உடைத்துப் பார்த்தவர் ட்ரம் என்று ஊடகங்கள் அவரைக் கிழித்துத் தொங்கவிட்டன.

அதுமட்டுமல்ல, அமெரிக்காவின் பரம எதிரியாக ஹாலிவுட் சினிமாவாலும் ஊடகங்களாலும் உருவகிக்கப்படும் ரஷ்யாவின் ஆதரவைப் பெற்றவர் அல்லது ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினுக்கு இணக்கமானவர் என்பதும் ட்ரம் ☞ 2

# கடினமான காலத்தின் கடைசிப் பகுதி இது
## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

நாம் எதிர்கொள்ளும் கடினமான காலத்தின் கடைசிப் பகுதி இதுவாகும். என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் நேற்று கொழும்பு நெலும் பொக்குண கலையரங்கத்தில் இந்த நூல் வெளியிடப்பட்டது. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, 9ஆவது நாடாளுமன்ற உறுப்பினராக 2021 ஜூன் 23 பதவியேற்றதிலிருந்து, மே 2023 வரையிலான அவரது ☞ 9

# யானைகளைவிட கோட்டா, பஸிலால் நாட்டுக்கு ஏற்பட்ட பாதிப்பே அதிகம்
## சாணக்கியன் சபையில் தெரிவிப்பு

யானைகளால் விவசாயத்துக்கு ஏற்பட்ட பாதிப்பைவிட கோட்டாபய ராஜபக்ச, பஸில் ராஜபக்ச ஆகியோரால் இந்த நாட்டுக்கு பெரும் விளைவுகள் ஏற்பட்டுள்ளன. ஆகவே ராஜபசக்களால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து சபை ஒத்திவைப்பு விவாதத்தை நடத்த வேண்டும் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வன விலங்குகளால் பயிர்களுக்கு ஏற்படும் சேதம் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

விவசாயம், கால்நடை மற்றும் மீன்பிடி ஆகியன வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களின் பிரதான ஜீவனோபாயமாக காணப்படுகிறது. காட்டு யானைகளால் விவசாய பயிர்நிலங்கள் அழிக்கப்படுவதால் விவசாயிகள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள் ☞ 2

# சாணக்கியன் எம்.பிக்கு நேற்று நாடாளுமன்றத்தில் மிரட்டல்
## அவரே சபையில் குற்றச்சாட்டு

தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனுக்கு நாடாளுமன்றத்தில் பிரதமர் அலுவலகத்தில் வைத்து மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரான ரோஹித்த அபேகுணவர்த்தன தன்னைத் தாக்க முற்பட்டார் என்று சிறப்புரிமைப் பிரச்சினை ஒன்றை எழுப்பினார். அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று சபாநாயகர் தெரிவித்தார். தான் சாணக்கியனுடன் சாதாரணமாகத்தான் பேசினேன், அவரை மிரட்டவில்லை என்று ரோஹித்த தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் உள்ள பிரதமரின் அலுவலகத்திற்குத் தான் சென்றிருந்தபோது அங்கு நின்றிருந்த ரோஹித்த அபேகுணவர்த்தன, ஆட்சியாளர்களை விமர்சிக்கும் இவர்களுக்கு இங்கு என்ன ☞ 2

### பொலிஸ் மா அதிபராக
# தேசபந்துவின் நியமனத்தை எதிர்த்து வழக்குத் தாக்கல்

பொலிஸ் மா அதிபர் பதவிக்கு தேஷபந்து தென்னகோன் நியமிக்கப்பட்டமையை சவாலுக்கு உட்படுத்தி, ஐக்கிய மக்கள் சக்தியினால் உயர்நீதிமன்றில் நேற்று அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கட்சியின் ஊழல் எதிர்ப்புக் குழு உறுப்பினர்களான நிரோஷன் பாதுக்க மற்றும் ஆனந்த பாலித ஆகியோரால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் மற்றும் சபாநாயகர் தலைமையிலான அரசியலமைப்பு ☞ 9

### தொழிலாளர்களின் சொத்துக்களைக் காக்க
# பராட்டே சட்டம் குறித்த முடிவை நடைமுறைப்படுத்துவது அவசியம்
## எதிர்க் கட்சித் தலைவர் வலியுறுத்து

தொழிலாளர்களின் சொத்துக்கள் ஏலத்தில் விடப்படுவதைத் தடுக்கும் வகையில், அமைச்சரவையில் எடுத்த தீர்மானத்துக்கு அமைய பராட்டே சட்டத்தை இடைநிறுத்துவதற்கு மத்திய வங்கி ஊடாக ஆளும் தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று விசேட கூற்றொன்றை முன்வைத்து குறிப்பிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். ☞ 8

# சாணக்கியனின் குற்றச்சாட்டு குறித்து நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்
## எதிர்க் கட்சித் தலைவர் வலியுறுத்து

சாணக்கியனின் குற்றச்சாட்டுத் தொடர்பில் சபாநாயகரின் கவனத்திற்குக் கொண்டுவந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச.

நாடாளுமன்றத்தில் நேற்று ஒழுங்குப் பிரச்சினை ஒன்றை முன்வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றத்துக்குள்ளும் நாடாளுமன்ற வளாகத்திலும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது சபாநாயகர் உள்ளிட்ட அதன் பணியாட்தொகுதியின் கடமையாகும். எதிர்க்கட்சி உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்திருந் ☞ 2

# மின் கட்டணக் குறைப்புக்கு ஏற்ப உணவு விலைகள் குறையவில்லை
## அமைச்சர் காஞ்சன விஜயசேகர சுட்டிக்காட்டு

மின்சாரக் கட்டணங்கள் குறைக்கப்பட்ட அளவிற்கு உணவு விலைகள் குறைக்கப்படவில்லை. பொதுச் சேவைகளில் ஈடுபடுவோரால் மக்களுக்கு பெருமளவான நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார் மின் சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2024 மார்ச் 5 நள்ளிரவு முதல் மின்சார கட்டணத்தை 21.9% இனால் குறைக்க முடிந்தது. 30 அலகுகளுக்கு குறைவான மின் பாவனையாளர்களின் மின் அலகு ஒன்றுக்கான விலை 33% இனால் குறைக்கப்பட்டுள்ளது. 31 -60 அலகுகளுக்கு இடையிலான பாவனையாளர்களுக்கு அலகு ஒன்றுக்கு 28% இனால் கட்டணம் குறைந்துள்ளது. 60- 90 அலகுகளுக்கு இடையிலான பாவனையாளர் ☞ 10

# வெடுக்குநாறி ஆலய பூசகர் உட்பட இருவர் நேற்று கைது
## சிவராத்திரி பூசைக்குச் சென்றபோது சம்பவம்

வவுனியா வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் சிவராத்திரி தின ஏற்பாடுகளை முன்னெடுத்துக் கொண்டிருந்த ஆலயத்தின் பூசகர் உட்பட இருவர் நெடுங்கேணி பொலிசாரால் வலுக்கட்டாயமாக கைது செய்யப்பட்டனர்.

இன்று மகாசிவராத்திரி தினத்தை முன்னிட்டு வெடுக்குநாறிமலையில் விசேட பூஜை வழிபாடுகளை மேற்கொள்வதற்கு ஆலய நிர்வாகத்தினர் முயற்சிகளை எடுத்திருந்தனர்.

இந்நிலையில் அவர்களது முயற்சிக்கு பொலிசாரால் தடங்கல் ஏற்படுத்தப்பட்ட நிலையில் ஆலயத்தின் நிர்வாகத்தினால் வவுனியா நீதிமன்றில் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அதனை செவ்வாய்க்கிழமை (5) விசாரணைக்கு எடுத்த நீதிமன்றம் வெடுக்குநாறிமலை ஆலய விடயத்தில் நீதிமன்றம் ஏற்கனவே வழங்கிய கட்டளையின்படி செயற்படுமாறு ஆலய நிர்வாகத்திற்கு உத்தரவு வழங்கியது.

இதனையடுத்து சிவராத்திரி தின ☞ 9

### பொருளாதாரச் சீரமைப்பில்
# அரசின் உறுதியான அர்ப்பணிப்புக்கு சர்வதேச நாணய நிதியம் பாராட்டு

சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து பொருளாதாரச் சீரமைப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை அரசின் உறுதியான அர்ப்பணிப்பைப் பாராட்டுவதாகவும், அத்தகைய அர்ப்பணிப்புக்கள் முன்னேற்றகரமான மாற்றங்களை ஏற்படுத்தும் என்றும் சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான தூதக்குழுவின் தலைவர் பீட்டர் ப்ரூவர் தெரிவித்தார்.

நிதி அமைச்சில் நேற்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சர்வதேச ☞ 9

### உயிரித்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் குறித்த
# ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுத்த ஆளும் தரப்பு ஏன் தயங்குகிறது?
## நாடாளுமன்றில் காவிந்த ஜயவர்த்தன கேள்வி

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையின் பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கு ஆளும் தரப்பு ஏன் பின்வாங்குகிறது? அறிக்கையின் பரிந்துரைகளை செயற்படுத்த ஆளும் தரப்புக்குத் தார்மீக உரிமை ☞ 10

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

மீதானஎதிர்ப்புகளுக்குக்காரணமாக இருந்தது. இதன்விளைவாகத்தனது இரண்டாவது அதிபர் தேர்தலில் ட்ரம் தோல்வியுற்றார்.

குடியரசுக் கட்சியைச் சேர்ந்தவரான ட்ரம்ப் தனது போட்டியாளரும் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவருமான ஜோ பைடனிடம் தோற்றதன் மூலம் தனது இரண்டாவது பதவிக் காலத்தில் அதிபராகும் வாய்ப்பை இழந்தார். ஆனாலும் மனிதர் விடுவதாக இல்லை. அதிபர் தேர்தலில் தோற்றுவிட்டால் ஒதுங்கி மற்றவர்களுக்கு வழிவிடும் அமெரிக்க 'ஜென்டில்மேன்' தனங்களை எல்லாம் தூக்கிக் கடாசிவிட்டு, தனது இரண்டாவது பதவிக் காலத்திற்காக மீண்டும் போட்டியிடுவேன் என்று களமிறங்கியிருக்கிறார் ட்ரம்ப்.

அமெரிக்காவில் ஜனாதிபதி வேட்பாளராவதற்கே முதலில் கட்சிக்குள் கடும் போட்டியைச் சந்திக்கவேண்டும். குடியரசுக் கட்சிக்குள் அப்படி நடந்த கடும் போட்டியில் இப்போது ட்ரம்ப் அனேகமாக வெற்றிபெற்றுவிட்டார் என்கின்றன செய்திகள். அவரை எதிர்த்துப் போட்டியிட்டவரான நிக்கி ஹாலே வேட்பாளராவதற்கான தனதுபரப்புரைகளைநிறுத்திவிட்டார் என்று செய்திகள் வந்திருக்கின்றன. இதன் மூலம் குடியரசுக் கட்சியின் அடுத்த அதிபர் வேட்பாளராக ட்ரம்ப் போட்டியிடுவது அனேகமாக முடிவாகிவிட்டது. அவர் மீண்டும் ஜோ பைடனைப் போட்டியில் சந்திப்பார்.

இங்கேதான்கட்சிக்குள்தலைவர் தேர்தல்நடத்தினார் அது இரண்டாகப் பிளக்கும், ஒருவர் தேசியத்தின் காவலராவார் மற்றவர் தேசியத் துரோகியாவார். கட்சி ஒழுங்காக யாப்புப்படி தலைவர் தேர்தல் உட்பட வேறு எந்தத் தேர்தலையும் நடத்தாது, பின்னர் நீதிமன்றத்திற்குச் சென்று நாங்கள் யாப்புப்படி நடக்கவில்லைத்தான்என்றுவெட்கம் ஏதுமின்றிஒத்துக்கொள்ளும். அப்படி ஒத்துக்கொண்டதையே ஒரு பெருமையாகக் அந்தக் கட்சி உறுப்பினர்கள் சமூகவலைத்தளங்களில் கொண்டாடித் திரிவர் என்கிற சம்பவங்கள் எல்லாம் நடக்கும்.

அமெரிக்காவில் அப்படியில்லை என்பதாலும் அங்கு உட்கட்சி ஜனநாயகம் மிகச் செழிப்பாக வளர்ந்தோங்கி இருப்பதாலும் ட்ரம்ப் கட்சிக்குள் முட்டி மோதிக்கொண்டு மீண்டும் அதிபர் வேட்பாளராகி வருகிறார். வரலாற்றில் அமெரிக்காவின் மிக மோசமான, கேவலமான, கோமாளித்தனமான அதிபர் என்று ஒரு கட்டத்தில் ஒதுக்கப்பட்டு அதற்காகவே தோற்கடிக்கப்பட்டவர்தான் ட்ரம்ப். அந்த வீழ்ச்சியிலிருந்து தளராது மீண்டு எழுந்து வந்துள்ள அவர் அதிபர் தேர்தலிலும் போட்டியிடவுள்ளார். அவர் போட்டியிட்டால் ஜோ பைடன் மீண்டும் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் என்று சொல்லப்படுகின்றது. ஆனாலும் ட்ரம்பின் எழுச்சி இலங்கையைப்பொறுத்தவரைக்கும் மற்றொரு பாடமாகவும் இருக்கக்கூடும்.

ட்ரம்ப் அமெரிக்க அதிபராக வெற்றி பெறுவதற்கான முக்கிய காரணங்களில் ஒன்று அவர் முன்வைத்த "அமெரிக்க தேசியம்" கொள்கை. அமெரிக்காவின்பல்லினக் கலாசாரத்திற்கும் குடியேற்றப் பாரம்பரியத்திற்கும் வேட்டு வைத்து அமெரிக்காவில் உள்ள எல்லாமும் அமெரிக்கர்களுக்கே என்றவகையில் அவரது கோட்பாடு அமைந்திருந்தது. ட்ரம்புக்குச் சமாந்தரமாக இலங்கையில் எழுச்சி பெற்றவர்தான் கோட்டாபய ராஜபக்சவும். அவரும் இலங்கைத் தேசியத்தைத் தூக்கிப் பிடித்துத்தான் அரச தலைவரானார். சிங்கள மக்களின் தனிப் பெரும் ஆதரவைப் பெற்றார். பின்னர் அதே மக்களாலேயே நிராகரிக்கப்பட்டுப் பதவி இழந்தார். ட்ரம்ப் போன்றே இலங்கை வரலாற்றில் அதிகம் எள்ளி நகையாடப்பட்ட ஒரு அரசுத் தலைவர் அவர்.

தான் பதவி கவிழ்க்கப்பட்டது குறித்து அவர் நேற்று ஒரு புத்தகத்தை வெளியிட்டுள்ளார். தன்னைக் கவிழ்ப்பதற்கான வெளிநாட்டுச் சதியைத் தன்னால் சரிவரக் கையாள முடியவில்லை என்று அந்தப் புத்தகத்தில் கவலைப்பட்டுள்ளார். பதவியை விட்டோடி இரண்டு வருடங்களிலேயே இப்படித்தன்னை நியாயப்படுத்தி ஒரு புத்தகத்தை எழுதக்கூடிய நிலைக்கு அவரால் மீள முடிந்திருக்கிறது. எனவே ட்ரம்ப் மாதிரி அவரும் எதிர்காலத்தில் தனது அடுத்த பதவிக் காலத்திற்காகப் போட்டியிட முன்வரமாட்டார் என்று சொல்ல முடியாது. தான் மீண்டும் அரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிடும் முடிவு எதனையும் எடுக்கவில்லை என்று அண்மையில் அவர் தெரிவித்திருந்தார். எதிர்காலத்தில் அவர் அத்தகைய முடிவை எடுக்கக்கூடும். அதற்கான வாய்ப்புக்களை மறுத்திவிட முடியாது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## சதியைத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு சில வல்லரசு நாடுகள் ஜனநாயகம் மற்றும் சட்டவாட்சியின் காவல் தெய்வங்களைப் போன்று உலக அரங்கில் தம்மை காண்பிக்கின்றன. ஜனநாயகம், சட்டவாட்சியை ஊக்குவிப்பதாகக் கூறிக்கொண்டு அபிவிருத்தி அடைந்து வரும் அனைத்து நாடுகளிலும் சம்பளம்பெறும்செயற்பாட்டாளர்கள் வலையமைப்பொன்றை அந்த நாடுகள் பராமரிக்கின்றன. உண்மையில் அவர்கள் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கு பதிலாக தமது தேவைகளையே நிறைவேற்றிக்கொள்கின்றனர்.

இரவு 8 மணியளவில் பெங்கிரிவத்த வீதியை நெருங்கிய பேரணியில் குறிப்பிடத்தக்க ளவானவர்கள் இணைந்திருந்தனர். இந்த அனைத்தும் இடம்பெற்றுக்கொண்டிருக்கும்போது, இராணுவத் தளபதி சவேந்திர சில்வா, பாதுகாப்பு செயலாளர் கமால் குணரத்ன உள்ளிட்ட பாதுகாப்புப் படைகளின் கட்டளை அதிகாரிகள் கொழும்பு சங்ரிலா ஹோட்டலில் நடைபெற்ற திருமண நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர். நடப்பதை நான் ஷவேந்திரவுக்கும் கமலுக்கும் கூறினேன்.

சங்ரிலா ஹோட்டலில் திருமண நிகழ்வில் கலந்துகொண்டிருந்த அரச புலனாய்வுசேவையின்பணிப்பாளர் சுரேஷ் சலே மிரிஹானவிற்கு வந்தார். அவர் வருகின்றபோது அந்த இடத்தில் சுமார் நூறு ஆர்ப்பாட்டக்காரர்கள் மாத்திரமே இருந்தனர். எனினும், அங்கிருந்த பொலிஸ்விசேடஅதிரடிப்படையினர், இராணுவ அதிகாரிகளுக்கு செய்ய வேண்டிய விடயங்கள் தொடர்பில் எவரும் ஆலோசனை வழங்கியிருக்கவில்லை.

அந்த இடத்தில் இருந்து சலே - சவேந்திரவுக்கும் கமாலுக்கும் வீடியோ அழைப்பை ஏற்படுத்தி அங்கு வந்திருந்தவர்களை காண்பித்தாலும் அவர்களை கலைப்பதற்கான ஆலோசனை உயர்மட்ட அதிகாரிகளிடமிருந்து கீழ்மட்டத்திற்கு வரவில்லை.

இராணுவத் தளபதி, பாதுகாப்புப் படைகளின் பிரதம அதிகாரி, பாதுகாப்புச் செயலாளர் ஆகியோர் மறுநாள் முற்பகல் 10.30 மணியளவிலேயே எனது இல்லத்திற்கு வருகை தந்தனர்.

மேமாதம்9ஆம்திகதிஇரவுஅலரி மாளிகையில் இருந்த முன்னாள் பிரதமர் உள்ளிட்ட குழுவினரை அங்கிருந்து வெளியேற்றுவதற்காக இராணுவத்தினரை வரவழைக்கும் போது ஏற்பட்ட சீரற்ற அனுபவம் காரணமாக அனைத்து பாதுகாப்பு பிரதானிகளையும் ஜனாதிபதி மாளிகைக்கு அழைத்து நடவடிக்கை நிலையம் அங்கிருந்து செயற்படுத்தப்பட்டது

2022ஆம் ஆண்டு ஜூலை 9 ஆம் திகதி பாதுகாப்பு செயலாளர், முப்படைத் தளபதிகள், பொலிஸ் மா அதிபர், அரச புலனாய்வுச் சேவையின்பணிப்பாளர் ஆகியோர் இந்த நிலையத்தில் இருந்தனர். எனினும், மக்கள் கொழும்பிற்கு வருவதைத்தடுப்பதற்குதேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமற்போனது.

அனைத்துப் பிரவேச மார்க்கங்களையும் தடுப்பதனூடாக எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள் கொழும்பிற்கு வருவதை தடுப்பதே எமது திட்டமாக இருந்தது. எனினும், இத்தகைய வீதித்தடைகள் எந்த ஓர் இடத்திலும் நிறுவப்படவில்லை என்பதுடன், ஆர்ப்பாட்டக்காரர்கள் எவ்வித இடையூறும் இன்றி ஜனாதிபதி மாளிகைக்கு வருகை தந்தனர்.

மூழ்கும் கப்பலிலிருந்து நான் தனியாக தப்பிச் சென்றதாக ஒரு சில குழுவினர் கூறினாலும், நான் இராஜினாமா செய்யும்போது இலங்கை ஒருபோதும் மூழ்கிக் கொண்டிருக்கவில்லை. 2022ஆம் ஆண்டு மார்ச், ஏப்ரல் மாதங்களில் என்னை ஆட்சியிலிருந்து அகற்றுவதற்காக மூலோபாய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட சர்வதேச, உள்நாட்டு சதியை எதிர்கொள்ள என்னால் முடியாமற்போனது. நான் இன்னும் இரண்டு வருடங்கள் ஆட்சியில் நீடிப்பதற்காக ஓர் உயிரையேனும் இழப்பது அர்த்தமற்ற செயலாக இருந்தது.

2022ஆம் ஆண்டு மே 9 அலரிமாளிகை ஆக்கிரமிக்கப்பட்டதையடுத்து, அனைத்துப் பாதுகாப்புத் தலைவர்களையும் ஜனாதிபதி மாளிகைக்கு அழைத்துச் செல்வதில் முன்னெச்சரிக்கையாக இருந்தேன்.

2022 ஜூலை 9 காலை 8.00 மணிக்கு, மேல் மாகாணத்தின் சில பகுதிகளில் விதிக்கப்பட்டிருந்த பொலிஸ் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டது. இதனால் போராட்டக்காரர்கள் ஜனாதிபதி செயலகம், மாளிகைக்கு முன்பாகத் திரள ஆரம்பித்தனர்.

இதன் பின்னர் சுமார் 10.30 அளவில் பாதுகாப்புச் செயலாளரும் படைத்தளபதிகளும், என்னை வளாகத்தை விட்டு உடனடியாக வெளியேறுமாறு அறிவுறுத்தினார்கள்.

ஜனாதிபதி மாளிகைக்கு அருகில் குழுவொன்றும் கூடியிருந்தது. இதனால் ஏற்பட்ட பதற்றமான சூழ்நிலையால் முன்னெச்சரிக்கையாக சில அத்தியாவசிய பொருட்களுடன் நாங்கள் வாகனத்தில் ஏறி பின்வாயில் ஊடாக கடற்படை முகாமுக்குச் சென்றோம். மறுபுறம் முன்வாயிலினூடாக நுழைந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிட்டனர்.

அருகிலிருந்த கடற்படை முகாமிற்குள் செல்வதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் கடற்படைத்தளபதியே மேற்கொண்டிருந்தார். இதன்போது ரணில் விக்ரமசிங்கவின் வீட்டில் ரணலுடன் அவசர பேச்சுகளை முன்னெடுத்துக்கொண்டிருந்த பஸில் ராஜபக்சவும் எங்களுடன் இணைந்துகொண்டார்.

கொழும்புத்துறைமுகத்தைவிட்டு வெளியேறிய பின்னர் திருகோணமலைசென்றுகடற்படைதளத்தில் அன்றைய இரவைக் கழித்து மறுநாள் (ஜூலை 11) ஹெலிகப்டரில் கட்டுநாயக்க விமானப்படைத் தளத்துக்கு வந்து இரண்டாவது இரவை கழித்தோம்.

அடுத்த நாள் இரவு (12 ஜூலை) மாலைத்தீவு சென்று விடுதியொன்றில் தங்கியிருந்தேன். பின்னர் அங்கிருந்து சிங்கப்பூர் செல்வதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் மாலைத்தீவு அரசு மேற்கொண்டது.

நான் வெளிநாட்டில் இருந்ததால் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை பதில் ஜனாதிபதியாக நியமித்தேன். அரசியல் கட்சித் தலைவர்கள் என்னிடம் விடுத்த கோரிக்கைக்கு மதிப்பளித்துஜனாதிபதிபதவியிருந்து விலகினேன்.

நாட்டில் சட்ட ஒழுங்கை மீட்டெடுக்கும் திறன் கொண்ட பிரதமரிடம் ஜனாதிபதிப் பதவியை வழங்குவதற்கு தீர்மானித்து ரணில் விக்ரமசிங்கவிடம் அந்த பொறுப்பை வழங்கினேன்.

புதிய ஆளும்தரப்பு பதவியேற்கும் வரை தான் பதவியில் இருப்பேன் என ரணில் விக்ரமசிங்க என்னிடம் தெரிவித்திருந்தார். அதன் பிரகாரமே பதவி விலகினேன்

ஆர்ப்பாட்டக்காரர்களின் முற்றுகையை அடுத்து ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ஜனாதிபதி பதவியிலிருந்து விலகுமாறு கோரி தனக்குக் கடிதம் எழுதியிருந்தனர்.

கடிதத்தில் டலஸ் அழகப்பெரும, பேராசிரியர் சன்னஜயசுமன, கலாநிதி நாலக கொடஹேவா, பேராசிரியர் சரித ஹேரத், வசந்த யாப்பா பண்டார மற்றும் டிலான் பெரேரா உட்பட பலர் கையொப்பமிட்டிருந்தனர்.

இதன் பின்னர் 2022 ஆம் ஆண்டு ஜூலை 14 நான் பதவி விலகினேன். நான் பதவி விலகியதையடுத்து பிரதமர் ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் தலைவர்களின் அவசர கூட்டத்திற்கு அழைப்பு விடுத்தார். கட்சித் தலைவர்கள் எடுக்கும் எந்தவொரு தீர்மானத்தையும் ஏற்பதாக நான் கூறியிருந்தேன். அதன் பிரகாரமே பதவி விலகினேன் என்று தெரிவித்தார்.

## சாணக்கியனின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ததன் பிரகாரம் அவர் பிரதமரைச் சந்திப்பதற்கு அவரது காரியாலயத்துக்கு சென்றபோது, ஆளும்கட்சி உறுப்பினர் ரோஹித்த அபேகுணவர்த்தன அவரைத் தாக்குவதற்கு முயற்சித்தார் என்று இந்த சபையில் குற்றம் சாட்டியிருந்தார். இது பெரும் குற்றச்சாட்டாகும்.

நாடாளுமன்றத்தில் இருக்கும் அனைவருக்கும் பல்வேறு கருத்துக்கள், சிந்தனைகள் இருக்கின்றன. என்றாலும் எமது நிலைப்பாடுகள் தொடர்பில் எவ்வாறான கருத்துக்கள் இருந்தாலும் அதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு உடல் ரீதியான பாதிப்பை ஏற்படுத்த யாருக்கும் உரிமை இல்லை. அது ஆளும் தரப்பாக இருந்தாலும் எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரியே.

அதனால் எதிர்கட்சித் தலைவர் என்ற வகையில் எதிர்க்கட்சி உறுப்பினர் என்ற வகையில் இராசமாணிக்கம் சாணக்கியனின் சிறப்புரிமை தொடர்பில் கருத்து தெரிவிக்க எனக்கும் உரிமை இருக்கிறது. அதனால் அவரது குற்றச்சாட்டுத் தொடர்பில் சபாநாயகரின் கவனத்துக்குக் கொண்டுவந்து நடவடிக்கை எடுக்கவேண்டும். அதேபோன்று சாணக்கியனின் பாதுகாப்பு தொடர்பாகவும் விசேட கவனம் செலுத்த வேண்டும் - என்றார்.

## சாணக்கியன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேலை என்று கூறிக்கொண்டு தன்னைத் தாக்க முற்றபட்டார் என்று சாணக்கியனர் சபையில் தெரிவித்தார்.

அதற்கு, அவர் உங்களுக்கு மட்டும் பிரதமரல்லர் ஒட்டுமொத்த நாட்டுக்கும் பிரதமர் என்று தான் பதில் சொன்னபோது தன்னைத் தாக்க முற்பட்டார் என்றும் தன்னை மின் தூக்கிக்கு அருகில் வருமாறு அழைத்தார் என்றும் அங்கு தான் சென்றிருந்தால் தன்னைத் தாக்கி இருப்பார் என்றும் மேலும் தெரிவித்தார். இந்தச் சம்பவத்திற்கு மேலும் இரு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சாட்சி என்றும் அவர் தெரிவித்தார்.

தனக்கும் சண்டித்தனம் தெரியும் என்றபோதும் சபையில் ஒழுக்க விதிகளுக்குக் கட்டுப்பட்டுத் தான் நடந்துகொண்டார் என்றும் ரோஹிதவின் மிரட்டல் தனது சிறப்புரிமையை மீறும் செயல் என்பதால் அதுகுறித்துநாடாளுமன்றக்குழுவில் விசாரணை நடத்தவேண்டும் என்றும் சாணக்கியன் வலியுறுத்தினார்.

அதற்குப் பதிலளிக்கும் விதத்தில் பேசிய ரோஹித்த, இந்த தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இன வேறுபாடு இன்றி நீண்டகாலமாகப் பழகி வருபவர் என்றும் சாணக்கியனுடன் சாதாரணமாகவே பேசினார் என்றும் தெரிவித்தார். விசாரணைகள் நடத்தப்பட்டால் அதற்கு ஒத்துழைக்கத் தயார் என்றும் தெரிவித்தார்.

## யானைகளைவிட....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளார்கள். மட்டக்களப்பு மாவட்டத்தில் மண்டூர் மற்றும் வவுணதீவு ஆகிய பகுதிகளில் யானைகளின் ஊடுருவல் தீவிரமடைந்துள்ளன.

யானை -மனித மோதல் பற்றி மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திகுழுத் தலைவர் என்று குறிப்பிட்டுக்கொள்ளும் வியாபாரி'40 யானைகளை நீங்கள் எண்ணிக்கை எடுத்தீர்களா, யானை அதிகாரி, யானை பிரச்சினைக்கு என்ன பிரச்சினை என்று கூட்டத்தில் பொறுப்பற்ற வகையில் பேசுகிறார்.

ஒரு இலட்சம் யானை வேலி அமைப்பதாக குறிப்பிட்டுக் கொண்டு கோட்டாபய ராஜக்ச ஆட்சிக்கு வந்தார். ஆனால் தனது ஆட்சிக்காலத்தில் அவர் எதனையும் செய்யவில்லை. இறுதியில் நாட்டை வங்குரோத்துக்குதள்ளிவிட்டு நாட்டை விட்டு வெளியேறினார்.

காட்டு விலங்குகளினால் விவசாயத்துக்கு ஏற்பட்ட பாதிப்பை விட கோட்டாபய ராஜபக்ச, பஷில் ராஜபக்ச ஆகியோரால் இந்த நாட்டுக்கு பெரும் விளைவுகள் ஏற்பட்டுள்ளன. ஆகவே ராஜபசக்களால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து சபை ஒத்திவைப்பு விவாதத்தை நடத்த வேண்டும்.

கோட்டாபய ராஜபக்ச ஆட்சியில் இருக்கும்போது தமிழ்த்தரப்பினருடன் பேச்சில் ஈடுபடவில்லை. தான் ஒரு தரப்பினரது ஜனாதிபதி என்ற நிலைப்பாட்டில் இருந்துக் கொண்டு செயற்பட்டார். தவறான நிர்வாகத்தினால் பொருளாதாரம் பாதிக்கப்பட்டதால் தோற்றம் பெற்ற போராட்டத்தை தொடர்ந்து நாட்டை விட்டு தப்பியோடினார். தற்போது வெளிநாட்டு அரசியல் சூழ்ச்சி என்று புத்தகம் எழுதுகிறார்.

நாட்டை வங்குரோத்துக்குத் தள்ளியவர் என்று நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்ட பஸில் ராஜபக்ச தற்போது நாட்டுக்கு வருகைதந்துள்ளார். இவரை அழைப்பதற்கு ஆளும் தரப்பினர்கள் வெட்கமில்லாமல் சென்றுள்ளார்கள். இந்த நாடு வங்குரோத்துநிலையானதற்கு பஸில் ராஜபக்ச பொறுப்புக் கூறவேண்டும் என்று உயர்நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் அவருக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ராஜபக்ச குடும்பத்தின் அரசியல் இந்த நாட்டுக்கு வினையாகவே காணப்படுகிறது.

நாட்டு மக்கள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் நேற்று முன்தினம் சபையின் மோட்டார் சைக்கிள் தொடர்பில் சபை ஒத்திவைப்பு விவாதம் இடம்பெற்றது. இதன்போது குறைப்பாடுகளை நான் சுட்டிக்காட்டினேன். எனது உரையை சுட்டிக்காட்டி தங்கச்சங்கிலி அறுப்பதாக குறிப்பிடப்படும் நபர் எனது ஆடைகளை தலைஊடாக கழற்றுவதாக குறிப்பிட்டார். இவ்வாறானவர்களை மக்கள் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்ததால் தான் இந்த நாடு வங்குரோத்து நிலையடைந்தது.

என்னை தேசதுரோகி, புலி என்று தங்கம் அறுப்பவர் என்னை விமர்சித்தார். நாட்டு மக்களின் பிரச்சினைகளை எடுத்துரைக்கும்போது 7 மூளையாளர் என்று குறிப்பிடப் படும் பஸில் ராஜபக்சவின் சகாக்கள் எங்களுக்கு எதிராக உரையாற்றுகிறார்கள்.

தமிழ் மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்கான தீர்வு தொடர்பில் ஜனாதிபதியுடன் 2022 ஆம் ஆண்டு முதல் பேச்சு நடத்துகிறோம். அவற்றில் குறிப்பிட்ட விடயங்களையே திரும்ப திரும்ப குறிப்பிடுகிறார். லீசிங் முறையில் காணிகள் விடுவிக்கப்படும் என்று ஜனாதிபதி குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. தமது சொந்தக் காணிகளையே எம் மக்கள் கோருகிறார்கள். ஆகவே காணி விடுவிப்பு விவகாரம் குறித்து ஜனாதிபதி விசேட கவனம் செலுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளோம்.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை டயஸ்போராக்கள் எதிர்ப்பதாக அயலுறவுத்துறை அமைச்சர் குறிப்பிட்டார். பல ஆண்டுகளுக்கு முன்னர் நாட்டை விட்டு சென்ற இலங்கையர்கள்தான் டயஸ்போராக்களாக உள்ளார்கள். தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வு வேண்டும் என்றநிலைப்பாட்டில்தான் அவர்களும் உள்ளார்கள். ஆகவே சிறந்த விடயங்களுக்கு புலம்பெயர் தமிழர்கள் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என்றார்.

## வெடுக்குநாறி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பாடுகளை முன்னெடுப்பதற்காக நேற்று மாலை உழவியந்திரத்தில் சென்றுகொண்டிருந்த பூசாரி உட்பட இருவர் நெடுங்கேணி பொலிசாரால் வழிமறிக்கப்பட்டுக் கைதுசெய்யப்பட்டனர்.

வெடுக்குநாறிமலை ஆலயத்தில் பூஜை வழிபாடுகளை மேற்கொள்வதற்கு வவுனியா நீதிமன்றம் கடந்தவருடம் உத்தரவு

தொடர்ச்சி 10ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# கல்முனையில் தற்காலிக காணி அனுமதிப்பத்திரம் உள்ள வியாபாரிகளுக்கு நிரந்தர காணி உறுதிகள் வழங்க

(நூருல் ஹுதா உமர்)

கல்முனைமாநகரபிரதேசத்தில் உள்ள தற்காலிக காணி அனுமதிப்பத்திரம் (பெர்மிட்) உள்ள கடை சொந்தக்காரர்களுக்கு நிரந்தர காணி உறுதிகளை வழங்க நடவடிக்கை எடுக்கும் விதமாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், முன்னாள் இராஜாங்க அமைச்சருமான நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் புதன்கிழமை காணி ஆணையாளர் நாயகத்தை சந்தித்து கலந்துரையாடிய போது ஜனாதிபதியின் 'உறுமய' திட்டத்தின் கீழ் நிரந்தரமான காணி உறுதிகளை வழங்க காணி ஆணையாளர் நாயகம் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார்.

கல்முனைமாநகரபிரதேசத்தில் உள்ள கடை உரிமையாளர்கள் மத்தியில் மிக நீண்டகாலமாக நிலவிவரும் இந்தப் பிரச்சினையைமுடிவுக்கு கொண்டுவரும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் கடந்த வாரம் காணி அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ மற்றும் ஜனாதிபதி செயலாளர் சமன் எக்கநாயக்கவை சந்தித்து பேசியதை அடுத்து அவர்கள் வழங்கிய துரித ஒத்துழைப்பினால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதன்மூலம் கல்முனை மாநகர பிரதேசத்தில் உள்ள வர்த்தகர்கள் நன்மையடைய உள்ளனர். (05)



# சர்வதேசமகளிர்தின நிகழ்வுகள் களுவாஞ்சிக்குடியில் தொடக்கம்







(வி.ரி.சகாதேவராஜா)

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகத்தால் 'அவளுடைய பலம் - நாட்டிற்கு முன்னேற்றம்' எனும் தொனிப்பொருளில் இவ்வருடம் கொண்டாடப்படும் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பிரதேச செயலாளர் சிவப்பிரியா வில்வரத்னம் வழிகாட்டுதலின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வுகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

முதல் நிகழ்வாக கலைகள் மற்றும் அரங்க விளையாட்டுகளின் மூலமாக 'மகளிர் மனவெழுச்சி ஆற்றுப் படுத்துகை' எனும் 2 தினங்களைக் கொண்ட நிகழ்வானது பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

இரண்டாம் நாள் கலந்துகொண்டிருந்த மகளிர் சங்க உறுப்பினர்களின் கலைப்படைப்புகள் மற்றும் கலை நிகழ்வுகள் நடந்தன.

இந் நிகழ்வில் பிரதேச செயலக கிராம சேவை பிரிவுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 45 மகளிர் கலந்துகொண்டிருந்தனர்.

இந்த நிகழ்வின் வளவாளர்களாக ம. நிரோஷினிதேவி (சமதை பெண் நிலைவாத நண்பிகள் குழு), வி. சிந்துஉஷா (கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்) மற்றும் ப. ராஜதிலகன் (கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்வினை சிறப்பான முறையில் நடத்தியிருந்தனர். இந்த நிகழ்வினை பிரதேச செயலக சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு உத்தியோகத்தர்கள் ஒருங்கிணைப்பு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இப்போட்டிகள் யாவும் பகல் நேரப் போட்டியாக அமைந்ததும் குறிப்பிடத்தக்கது. (05)

# கிரிக்கெட்டில் சம்பியன்



(அபு அலா)

அட்டாளைச்சேனை அறபா வித்தியாலய பழைய மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட 09 பேர் கொண்ட 05 ஓவர் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தின் உபசெயலாளர் ஏ.அர்ஷாட் தலைமையில் கடந்த முதலாம் திகதி தொடக்கம் 03 ஆம் திகதி வரை இடம்பெற்ற இப்போட்டியில், 21 பழைய மாணவ அணிகள் பங்கேற்றுக் கொண்ட இச்சுற்றுப்போட்டியின் இறுதித் தெரிவுக்கு 2007 ஆம் ஆண்டு அணியும், 2013 ஆம் ஆண்டு அணியும் தெரிவாகின.




இதில் 2013 ஆம் ஆண்டு அணியினர் சம்பியனாகவும், 2007 ஆம் ஆண்டு அணியினர் இரண்டாவது இடதையும் பெற்றுக்கொண்டது. சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்ட அணிக்கு ரூபா 75,000 பணப் பரிசும், சம்பியன் கிண்ணமும், இரண்டாவது இடத்தினைப் பெற்றுக்கொண்ட அணிக்கு ரூபா 50,000 பணப் பரிசும் கிண்ணமும் வழங்கி வைக்கப்பட்டன.



இறுதிநாள் போட்டிக்கு அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பைசால் காசிம் பிரதம அதியாகவும், கௌரவ அதிதிகளாக சுங்கத் திணைக்களத்தின் ஓய்வுபெற்ற மேலதிக பணிப்பாளர் நாயகம் எஸ்நியாஸ், ஏ.சி.நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஏ.சி.நியாஸ் மற்றும் பாடசாலையின் அதிபர் எம்.ஏ.அன்சார் ஆகியோர் கலந்து கொண்டு இதனை வழங்கி வைத்தனர். (05)

# பிள்ளைகள் கற்றலில் பெற்றோர் பங்களிப்பு வேலைத் திட்டம் கல்முனை பாலிஹாவில்

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை)யின் சேர் ராசிக் பரீட் மண்டபத்தில் நீண்ட கால தேவையாக காணப்பட்ட பிளாஸ்டிக் கதிரைகளை பெற்றோர்களின் பங்களிப்பில் வழங்கி வைக்கும் 'பிள்ளைகளின் கற்றலில் பெற்றோர்களின் பங்களிப்பு' எனும் தெனிப்பொருளிலான நிகழ்வு செவ்வாய்க்கிழமை இடம்பெற்று கல்லூரி முதல்வர் எ.பி. பாத்திமா நஸ்மியா சனூஸிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் சுமார் 250 பிளாஸ்டிக் கதிரைகள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். மேற்குறித்த உயரிய பணியில் பங்களித்த அனைத்து பெற்றோர்கள் வாழ்வில் இறைவன் நல்லருள்



புரிய வேண்டும் என்றும் மாணவிகளின் கல்வி செயற்பாடுகள் சிறப்பு பெற பிரார்த்தனை செய்வதாக கல்லூரி சார்பாக ஆத்மார்த்தமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாக கல்லூரி முதல்வர் எ.பி. பாத்திமா நஸ்மியா சனூஸ் தெரிவித்தார். (05)



நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# ரணிலின் அரைகுறை சர்வாதிகாரம்

தன்னைப் பற்றிக் கேலிச் சித்திரங்கள் வரையப்பட்டிருப்பதன் மூலம் இலங்கையில் ஜனநாயகம் மேலோங்கி இருக்கிறது என்று அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கிறார். ஊடகங்களில் அவரைப் பற்றி வெளியான கேலிச் சித்திரங்களை (கார்ட்டூன்) தொகுத்து ஒரு புத்தகமாக வெளியிடும் நிகழ்வில் கலந்துகொண்டு பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

ஒரு நாட்டின் அரசுத் தலைவர் குறித்துக் கேலிச் சித்திரங்களை வரைவதற்கான சுதந்திரம் வழங்கப்பட்டிருப்பதன் காரணமாக இந்த நாட்டில் சர்வாதிகாரம் இல்லை என்று அவர் தனது பேச்சி நிறுவ முற்பட்டிருந்தார்.

”நாட்டில் அமைதி மற்றும் உறுதிப்பாட்டை ஏற்படுத்தவேண்டியிருந்த நேரத்தில்மாத்திரம்2000கேலிச்சித்திரங்கள்வரையப்பட்டுள்ளன. நாம் ஒரு சர்வாதிகார ஆட்சியை நடத்தியிருந்தால் அத்தகைய படைப்புகள் பிறந்திருக்காது. இவ்வாறான படைப்புக்கள் ஜனநாயகத்தின் ஓர் அங்கமாகும்” என்றார் அவர்.

”இன்று புத்தகங்கள் எழுதலாம். தொலைக்காட்சி, வானொலி, திரைப்படம் என எந்த வகையிலும் படைப்புக்களை உருவாக்கலாம். அந்த சுதந்திரம் இருக்கிறது. 1931 இல் இந்த நாட்டில் சர்வஜன வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்டது. அன்றிலிருந்து இந்த நாட்டில் ஜனநாயக முறை நடைமுறைப்படுத்தப்பட்டது.

எதிர்க் கட்சிகளைத் தடை செய்யவில்லை. எதிர்க்கட்சித் தலைவர்கள் சிறையில் அடைக்கப்படவில்லை. பிரச்சினைகள் இருந்தன. ஆனால் ஒரு தேர்தலுக்குப் பிறகு முடிவுகளை ஏற்றுக்கொண்டு அதற்கேற்ப தோல்வியை ஏற்றுக்கொண்டு ஆட்சியை விட்டு வெளியேறினர். ஆசியாவிலேயே இப்படி நடந்த ஒரே நாடு இலங்கைதான். நம்மிடையே எத்தனை பிரச்சனைகள் இருந்தாலும் ஜனநாயகத்தை மதிக்கிறோம்.

இந்த கார்ட்டூன்கள் அனைத்தும் நாட்டில் உள்ள சுதந்திரத்தைக் காட்டுகின்றன. இந்த வருட இறுதியில் ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல்கள் நடைபெறும் போதும் இவ்வாறான கேலிச் சித்திரங்கள் குறையப்போவதில்லை. மாறாக அவை அதிகரிக்கும். இந்த ஜனநாயக சுதந்திரத்தை நாம் முன்னெடுத்துச் செல்ல வேண்டும்'' என்று அவர் தனது உரையில் மூச்சுக்கு முன்னூறு தடவை ஜனநாயகம் பற்றிப் பேசினார். தனது ஆட்சி சர்வாதிகாரமானது அல்ல என்று தெரிவித்தார்.

காலைக்கதிர் வியாழக்கிழமை ஒரு கட்டுரை வெளியிட்டிருந்தது. அதில் ஜனநாயகப் பண்புகள் இருக்கின்றன என்பதற்காக அது ஜனநாயக ஆட்சியாகிவிடாது, சர்வாதிகாரப் பண்புகள் இல்லை என்பதற்காக அது சர்வாதிகார ஆட்சி இல்லை என்றுமாகிவிடாது என்பதை அந்தக் கட்டுரை மிகத் தெளிவாக விளக்கியிருந்தது. யோகேந்திரயாதவ்வால்எழுதப்பட்ட”சர்வாதிகாரநாடாகிறதா இந்தியா?” என்ற தலைப்பில் அந்தக் கட்டுரையில் இந்த வகையான ஆட்சியை ”அரைகுறைச் சர்வாதிகாரம்” என்று தெரிவிக்கப்பட்டிருக்கும்.'

ஸ்டீவன் லெவிட்ஸ்கி, லூகான் ஏ.வே என்ற இருவரும் இது தொடர்பாக 'ஜனநாயகம்' என்ற ஆய்வேட்டில் வரைந்த கட்டுரையில், இதனை சர்வாதிகாரத்தில் இது ஒரு துணைப் பிரிவு என்று குறிப்பிடுகின்றனர். ”இங்கே சர்வாதிகாரிகள் ஜனநாயக நடைமுறைகள் அனைத்தையுமே இரத்துசெய்துவிட மாட்டார்கள். ஆனால், அதிகாரப்பூர்வமற்ற வகையில் நெருக்குதலையும் கட்டுப்பாடுகளையும் கையாள்வார்கள், ஜனநாயகத்தின் முறையான கட்டமைப்புகளை அப்படியே தொடர அனுமதிப்பார்கள். இதை ஜனநாயகத்தின் மோசமான வடிவம் என்று கூறிவிட முடியாது, இது சர்வாதிகாரத்தின் அரைகுறை வடிவமாகும்.

இங்கு முறையான ஜனநாயக அமைப்புகள் நீடிக்க அனுமதிக்கப்படுவதுடன் அவற்றின் மூலம் அரசியல் அதிகாரம் பெறப்பட்டு, செயல்படுத்தப்படும். ஜனநாயகத்துக்கான விதிகளை, ஆட்சியில் இருப்பவர்கள் அடிக்கடி மீறுவார்கள், எனவே குறைந்தபட்ச ஜனநாயகத் தரம்கூட அந்த ஆட்சியில் இருக்காது. தேர்தல்கள் குறிப்பிட்ட கால இடைவெளியில் நடக்கும், தேர்தல்களிலும் பெருமளவு மோசடிகள் நடைபெறாது.

அதேசமயம், ஆட்சியாளர்கள் அரசின் வளங்களைத் தொடர்ந்து சுயநலத்துக்குப்பயன்படுத்துவார்கள், எதிர்க்கட்சிகளுக்குஊடகஆதரவு போதிய அளவு கிடைக்காமல் பார்த்துக்கொள்வார்கள், எதிர்க்கட்சி வேட்பாளர்களையும் ஆதரவாளர்களையும் அலைக்கழிப்பார்கள், சில வழிகளில் தேர்தல் முடிவுகளைக்கூட மாற்றும் மோசடிகளில் ஈடுபடுவார்கள் என்கின்றனர்.

ரணிலின் ஆட்சியும் இந்த அரைகுறை சர்வாதிகாரத்திற்குள் நன்கு பொருந்திப் போகும். அவர் உள்ளூராட்சி சபைத் தேர்தலைத் தனது அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தி நிறுத்தினார். ஜனநாயகப் போராட்டங்களைப் படைகளைக் கொண்டு உடனடியாகவே நசுக்குகின்றார், அத்தியாவசிய சேவைகள் அறிவிப்பு ஊடாக தொழிற்சங்க நடவடிக்கைகளை தடுக்கிறார், எதிர்க் கட்சிகளை, குறிப்பாக ஐக்கிய மக்கள் சக்தியைச் சிதைப்பதில் குறியோடு இருக்கிறார். நிகழ்நிலை காப்புச் சட்டம் போன்றவற்றின் மூலம் மக்களின் கருத்துச் சுதந்திரத்தை முடக்குவதில் தீவிரம் காட்டுகிறார். உயர் நீதிமன்றத்தின் பரிந்துரைகளை உதாசீனம் செய்து சட்டங்களை இயற்றுகின்றார். அரசமைப்புப் பேரவையை அரசமைப்புக்கு முரணாக இயங்கத் தூண்டுகின்றார். இப்படி ஜனநாயகத்திற்கு விரோதமாக பலவற்றையும் அவர் தொடர்ந்து ஆற்றி வருவின்றார். இவைதான் அரைகுறை சர்வாதிகார வடிவம் என்கிறார்கள் அறிஞர்கள். எனவே கேலிச் சித்திரங்களைப் பிரசுரிக்க அனுமதிப்பதால் மட்டும் இந்த நாட்டில் ஜனநாயகம் தழைத்தோங்குகின்றது என்று அர்த்தமில்லை.


# இதோ தேர்தல்!




என். சத்திய மூர்த்தி

ஒரு விதத்தில் பார்த்தால், ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய அதிபர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு தமிழ் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தனது கட்சியின் ஆதரவை தெரிவித்திருப்பது வேடிக்கையான விடயம். ஆனால், அதுவே கூட ஜனாதிபதி தேர்தல் வியூகத்தை தமிழ் அரசியல் மற்றும் சமூக பரப்பிற்கு கொண்டு வந்துவிட்டது. இனி பிற கட்சிகள் செய்யப்போவது எல்லாம் தேவானந்தாவை எதிர்ப்பதோ அல்லது ஆதரிப்பதோ (?) தான்.

தேவானந்தாவின் அறிவிப்பில் வேடிக்கையான விடயம் இது தான். அவர் யாருக்கு ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவு தெரிவித்து இருக்கிறாரோ, அந்த ரணில் விக்கிரமசிங்க, இது வரையிலும் தன்னை ஒரு வேட்பாளராகப் பிரகடனப்படுத்திக் கொள்ளவில்லை. அவர் தேர்தலில் போட்டியிட்டால், அவருக்கு ஆதரவு என்பது போல், ஆளும் மொட்டு கட்சி அமைச்சர்கள் சிலர் உள்ளிட்ப் பல தலைவர்களும் அவருக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்கள். அவ்வளவுதான். என்றாலும், ரணில் என்னவோ, அதிபர் தேர்தலில் களமிறங்குவார் என்பதே தற்போது அரசியல் ஆய்வாளர்களின் கணக்கு.



### போட்டியாளர்கள்

அவருக்கு எதிராக, சஜித் பிரேமதாசாவும் ஜேவிபி-ன் அனுர குமார திசநாயக்கேவும் போட்டியிடுவார்கள் என்றும் கருதப்படுகிறது.

இதற்கிடையே பலமான ஒரு கூட்டு எதிரணி வேட்பாளராகத் தங்களைத் தேர்வு செய்யமாட்டார்களா, என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா காத்திருக்கிறார். அவரைப் போலவே, பலரும் மறந்துவிட்ட பட்டளி சம்பிக ரணவக்கவும் எதிர்பார்ப்புடன் இருக்கிறார்.

இவர்களில், பொன்சேகா, இனப்போர் முடிந்த கையோடு அரங்கேறிய 2010 ஜனாதிபதி தேர்தலில் அப்போது பதவியில் இருந்த மஹிந்த ராஜபக்சேவை எதிர்த்து போட்டியிட்டு தோல்வியைத் தழுவினார். அதில், கூட்டமைப்பு தலைமையிலான தமிழர் தரப்பு நியாயப்படுத்த முடியாத முடிவை எடுத்து, பொன்சேகாவிற்கு வாக்களித்தது.



ஒருபுறம் இனப்போருக்கு அரசியல் தலைமைத்துவம் நல்கிய ராஜபக்சேக்கள். மறுபுறம் அந்தப் போரை ஒவ்வொரு கட்டத்திலும் வழி நடத்திய படைத் தலைவர். முள்ளிவாய்க்கால் சம்பவங்களுக்கு ராஜபக்சக்கள் பொறுப்பு கூற வேண்டுமா, அல்லது பொன்சேகா குற்றவாளி கூண்டில் நிற்க வேண்டுமா? என்று ஒரு பட்டி மன்றம் அன்று துவங்கி இருந்தால், இன்று வரை அது முடிவிற்கு வந்திராது.

### மண்டபத்தில் எழுதிவைத்து...

ஆனால், திருவிளையாடல் திரைப்படத்தில், தருமி சொன்னது போல், யாரோ மண்டபத்தில் எழுதி வைத்த முடிவின் படி, தமிழர்கள் மஹிந்தாவை எதிர்த்து பொன்சேகாவிற்கு வாக்களித்தார்கள். அதன் பின்னர், போர்க் குற்றம் மற்றும் அதில் இராணுவத்தினரின் பங்கு என்பது குறித்து எல்லாம் பேசுவதற்குத் தமிழர்கள் அனைவருமே தார்மீக நிலையை இழந்து விட்டனர்.

இன்று தமிழர்கள் பொறுப்புகூறல் விடயத்தில் செய்து வருவதெல்லாம், செத்த பாம்பை அடிக்கும் வீர விளையாட்டு மட்டுமே. காரணம், ஏதோ ஒரு காலகட்டத்தில், இனப்போர் காலத்திய பொறுப்பு கூறல் விசாரணைகள் உண்மையிலேயே அரங்கேறுமானால், அவர்களால், இராணுவத்தினரை மனசாட்சியோடு குற்றவாளிகள் என்று கூற முடியுமா? அல்லது, ராஜபக்சாக்களை மட்டும் இன்னமும் குற்றம் சாட்டிவிட முடியுமா?

எது எப்படியோ, தற்போது, தேவானந்தா, ஜனாதிபதி ரணிலுக்காகத் தமிழர்களின் படையணி ஒன்றை முன்னெடுக்க தயாராகி உள்ளார். அவருக்கு பின்னால், பிற தமிழர் கட்சிகளோ, சமுதாய அமைப்புகளோ நிற்பதாகத் தெரியவில்லை. ஆனால், எங்கோ நடக்க இருப்பதாக தமிழர்கள் நினைத்துக் கொண்டிருக்கும் ஜனாதிபதி தேர்தல் தற்போது அவர்களுக்கு மத்தியிலும் நிலைகொள்ள துவங்கி விட்டது.

### தடாலடி ஆதரவு?

ஜனாதிபதி என்ற தோரணையில், ரணில் தொடர்ந்து தமிழர் பகுதிகளுக்கும் வந்து-சென்ற வண்ணம் இருக்கிறார். அடுத்த மாதம் தமிழ் வருடபிறப்பு கொண்டாடுகிறேன் என்று ஏதாவது தமிழ் பேசும் பகுதிக்கு அவர் வந்தாலும் ஆச்சிரியப்படுவதற்கில்லை. இடையில், சஜித் பிரேமதாசாவும் ஓரிரு முறை தமிழர் பகுதிகளில் அட்டெண்டன்ஸ் மார்க் செய்துள்ளார்.

குறிப்பாக, ஜேவிபி-ன் அனுர குமார திசநாயகே தனது பங்குக்கு ஜனாதிபதி தேர்தலை தமிழர் பகுதிக்கே கொண்டு வந்து விட்டார். இந்த கிழமையில், ஒரு முறையல்ல, இரண்டு முறை அவர் வடக்கு மாகாணத்திற்கு பயணம் செய்கிறார். முதல் முறை வவுனியா, அடுத்து யாழ்பாணம் ஆகிய இரண்டு இடங்களுக்கும் வருகை தருகிறார் அவர், இங்குள்ள இடதுசாரி தமிழ்த் தலைவர்களை சந்தித்து பேசுவார் என்று எதிர்பார்க்கலாம்.

இதற்கு முன்னரும், கோவிட் காலத்தில் ஜேவிபியில் இருந்து பிரிந்து சென்ற முன்னணி சோசலிச கட்சி தலைவர் குமார் குணரத்தினத்துடன் சுரேஸ் பிரேமசந்திரன் போன்ற தமிழ் தலைவர்கள் நிகழ்நிலை தொடர்பில் கருத்து பரிமாறிக்கொண்டது நினைவிருக்கலாம். அதற்காகவெல்லாம், தற்போது, தமிழர்கள், தடாலடியாக அனுரவையோ அல்லது குமார் குணரத்தினம் போட்டியிட்டால் அவரையோ ஆதரிப்பார்கள் என்றல்ல பொருள்.


ஆனால், தமிழர் அரசியல் பரப்பில் தற்போதைய நிலையே தொடருமானால், அவர்களில் சிலராவது, தங்கள் போக்கிற்கு போக எத்தனிக்கலாம். என்றாலும், அவர்களுக்கும் இனப்பிரச்சினையில் ஜனாதிபதி வேட்பாளர்களின் நிலைமை தெளிவுபடுத்தப்படாமல், அடுத்த கட்டத்திற்கு நகரமுடியாது. இது தான் யதார்த்த நிலை.

தொடர்ச்சி 5ம் பக்கம்....




# இதோ தேர்தல்!

4ம் பக்கத்தொடர்ச்சி....




### எள்ளளவு கவலை இல்லை

ஆனால், தற்போதைய தமிழ் இளைஞர்களிடையே. இனப்பிரச்சினை வெறும் பேசுபொருள் மட்டும்தான். அவர்களில் பலரும் இந்த பிரச்சினை குறித்து எள்ளளவும் கவலை கொள்வதாகத் தெரியவில்லை. மாறாக, இனப்பிரச்சினையின் பெயரில் தங்களது எதிர்காலத்தை தொலைப்பதற்கு அவர்கள் தயாரில்லை.

இன்னும் சொல்லப்போனால், இனப்பிரச்சினையை காரணம் காட்டி, தங்களின் எதிர்காலத்தை முடக்க நினைக்கும் தங்களது மூத்த தலைமுறையினர் மீது அவர்களுக்கு அளவொண்ணா ஆத்திரம். தங்களது வாழ்க்கையையும் தொலைத்து விட்டு, இப்போது அடுத்த தலைமுறையினரின் தலையில் கைவைப்பதை அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

அந்த இளையதலைமுறையினருக்கு இனப்பிரச்சினையோடு உணர்வுபூர்வமான இணைப்பு இருப்பதாக தெரியவில்லை. மாறாக, கனடாவிற்கோ, ஆஸ்திரேலியா, ஐரோப்பா என்று மேலை நாடுகளில் ஏதாவதொன்றில் நிரந்தரமாக குடிபுகுவதற்குத்தான் அவர்களுக்கு விருப்பம்.

### இரண்டுங்கெட்டான் நிலை

மேலை நாடுகளில் வசதியாக வாழ்ந்து கொண்டு, இனப்பிரச்சினைக்காகப் போராடவேண்டும் அல்லது இங்கிருப்போரை மட்டும் உசுப்பிக்கொண்டே இருக்க வேண்டும், என்பது போன்ற தற்போதைய புலம்பெயர்ந்தோரின் இரண்டுங்கெட்டான் நிலை அவர்களுக்கு இல்லை. அவர்கள் எதிர்பார்ப்பதெல்லாம் தற்போதைய புலம்பெயர்ந்தோர் போலவே, அந்த நாடுகளில் பொருளாதார அகதிகளாக சென்று, நிரந்தரமாக வசிப்பதை தான்.

அவ்வாறான தங்களது முயற்சிகளுக்கு இங்கு அரசுக்கு எதிரான போராட்டங்களில் கலந்துகொண்டதாக ஒளிப்படங்களில் இடம்பெற்றால், அந்த அளவிற்கு நல்லது. மாறாக, அவ்வாறான உப்புசப்பில்லாத போராட்டங்களில் கலந்துகொண்டுவிட்டு, அதற்காக பொலிசார் வழக்கு பதிவு செய்தால், அதனால் வெளிநாடு போகும் வாய்ப்பு தட்டிப் பறிக்கப்படுமோ என்று கவலைபடுபவர்களும் உண்டு.

இந்தப் பின்னணியில். இன்னும் பத்து அல்லது இருபது ஆண்டுகளில் இங்கு இருப்போரில் பலரும் இனப்பிரச்சினை என்றால், கிலோ என்ன விலை? என்ற லெவலில் பேசினால் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. இதனைத் தங்களை மட்டுமே அறிவாளிகள் என்று கருதி செயல்படும் தங்போதைய தமிழர் தலைமைகள் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

மாறாக, தென்னிலங்கை சிங்கள பேரினவாதிகள் இதனை அறிந்தே வைத்திருக்கிறார்கள். ஜனாதிபதி ரணில் ஆகட்டும் அல்லது அவரது இடத்தில் வேறு யாராவது ஆகட்டும், இனப்பிரச்சினையை ஆறப்போட்டால், அதனை இல்லாமலே ஆக்கிவிடலாம் என்பதில் தெளிவாக இருக்கிறார்கள். அதனை தமிழ் தலைமைகள் உணர்ந்ததாகவே தெரியவில்லை.

### பொது வேட்பாளர்

இந்தப் பின்னணியில், ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்கள் மத்தியில் பொது வேட்பாளர் களமிறக்கப்படவேண்டும் என்ற பேச்சும் காணாமல் போய்விட்டது. அந்த இடத்தையும், தமிழ் அரசு கட்சியின் உள்குத்துகள் காணாமலாக்கி விட்டன. இந்த வேகத்தில் போனால், ஜனாதிபதித் தேர்தல் அடுத்து வருவதற்கு முன்னர் தமிழ் அரசு கட்சியின் நீதிமன்றம் சார்ந்த போட்டா-போட்டி முடிவிற்கு வந்திருக்கும் என்றுகூடத் தோன்றவில்லை.

இடைப்பட்ட காலத்தில், விக்னேஸ்வரன் பொது வேட்பாளராகத் தனது பெயரை தானே முன்மொழிந்து, வழிமொழிந்து கொண்டார். அதற்கு ஒரு துரும்பும் அசைந்து கொடுக்கவில்லை. தொடர்ந்து, செல்வம் அடைக்கலநாதன், சிறீதரன், ஏன் சிவாஜிலிங்கம் போன்றோர் தங்களை பொது வேட்பாளர்களாக அடையாளம் காட்டிக்கொண்டால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இன்றுள்ள நிலைமையில், ஒன்றில், தமிழர்கள் மத்தியில் இருந்து ஒரு பொது வேட்பாளர்கூட களத்தில் இருக்கமாட்டார்கள். அல்லது, பொது வேட்பாளர்கள் என்று கூறிக்கொண்டு. அரை டஜன் தலைவர்கள், தமிழர் சமூக பரப்பில் வலம் வருவார்கள். இரண்டுமே, அனைத்து அரசியல் மற்றும் சமூக தலைமைகள் ஒருமித்து எடுத்த கொள்கை அடிப்படையில் இருக்காது என்பது மட்டும் நிச்சயம்.






கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 80/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Coca Cola Tin - 250/=




# மகாசிவராத்திரியின் மகத்துவம்

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண் .... ஆஸ்திரேலியா



" மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் " என்று நம்பிக்கை ஊட்டினார் ஞானசம்பந்தப் பெருமான்.அவரால் அப்பரே என்று அழைக்கப்பட்டவர், " நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா " என்று அழைத்து " கற்றுணை பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும் - நற்றுணையாவது நமச் சிவாயவே " என்று உபதேசம் செய்தார்.அவர்களின் பின்னர் வந்தவர் " மீளா அடிமை உமக்கே ஆளாய் " என்று இறைவனிடம் இயம்பி நிற்கின்றார். " ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி - உலப்பிலா ஆனந்தமாய தேனினைச் சொரியும் செல்வமாகிய சிவனை " , " நமச்சிவாய வாழ்க, நாதன் தாள் வாழ்க , இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க " என்று பணிந்து நின்று அதன் வழியில் எம்மையும் ஆற்றுப்படுத்துவராக மணி வாசகப் பெருமான் வந்து நிற்கிறார். இவர்கள் யாவருமே இறை நினைப்பினை மனமிருத்தி வாழ்நாளெல் லாம் வாழ்ந்தவர்கள். இவர்கள் சமயநெறியின் வழியில் கால்பதித்து நின்றவர்கள் எனலாம். இவர்களை முன்னிறுத்தியே " நால்வர் வழியில் நடப்பது நன்று " என்றும் , " நாலு பேர் சொல்லுவதைக் கேள் " என்றும் மரபாக வந்திருக்குமோ என்பதும் கருத்திருத்த வேண்டியதே.இவர்களின் சிந்தனை, செயற்பாடு , வாழ்

வியல் முறைகள் அத்தனையுமே கோவிலாகவே இருந்திருக்கிறது என்பதுதான் முக்கியமா கும். கோவிலை மையமாகக் கொண்ட இவர்களின் செயற்பாடுகளிற் கிடைத்த அனுபவங்கள் எங்கள் சமயநெறியில் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றன. முழுமுதற் கடவுளாய் எம்பிரான் சிவனையே இவர்கள் யாவரும் பணிந்து போற்றி , தங்களின் மனத்தைப் பக்தியால் பிணைத்து , உருக்கமாய் பல தெய்வத் திருமுறைகளாக ஆக்கி எமக்கெல்லாம் அளித்திருக்கிறார்கள். அவர்களின் அகத்தில் அமர்ந்திட்ட அந்த ஆதியும் அந்தமு மில்லா அரும்பெருஞ் சோதியான சிவனைக் குறித்து பல விரதங்கள் அனுடிக்கப்பட்டு வருவதை யாவரும் அறி வோம்.அப்படி அமையும் அந்த அருட் சோதியான சிவனின் விரதங்களுள் மிகவும் போற்றுதலுக்கு உரியதா கவும், ஆன்மீக. அறிவியல் கருத்துகள் நிறைந்ததாகவும் அமைகின்ற விரதந்தான் வருடந் தோறும் வருகி ன்ற " மகா சிவராத்திரி " விரதமாகும்.

மகிமை வாய்ந்த சிவராத்திரி என்பது ஐந்துவகையினதாக இருக்கிறது என்பது நோக்கத்தக்கத்தாகும். திங்கட்கிழமையோடு இணைந்து வருவது " யோக சிவராத்திரி. வருடத்தின் பனிரெண்டு மாதங்களில் வரு கின்ற தேய்பிறை, வளர் பிறைகளில் வரும் சதிர்த்தசி திதியில் வருகின்ற இருபத்து நான்கு நாட்களை யும் " யோக சிவராத்திரி " என்னும் பெயரினால் அழைக்கின்றனர் . தை மாதம் தேய்பிறை பிரதமை தொடங்கி பதிமூன்று நாட்கள் தினமும் ஒரு வேளை மட்டும் உணவு உண்டு , பதினான்காம் நாள் வரு கின்ற சதிர்த்தசி திதியன்று முறையாக விரதம் இருப்பதுதான் " பட்ச சிவராத்திரி " என்று அழைக்கப்படு கிறது,சிவராத்திரி என்பது பெரும்பாலும் அமாவாசை அல்லது சதிர்த்தசி திதியை அண்டியே வரும். ஆனால் " மாத சிவராத் திரி " மாதத்தின் மற்றைய திதிகளிலும் வருகிறது என்பது நோக்க த்தக்கதாகும். இப்படிச் சிவராத்திரிகள் இடம் பெற்றாலும் மாசி மாதத்து தேய்பிறைச் சதுர்த்தசி திதியில் வருகின்ற சிவராத்திரியே " மகா சிவரா த்திரி " என்று ஏற்றிப் போற்றி அனுட்டிக்கப்படுகிறது. ஐந்து சிவராத்திரிகள் என்னும் நிலையில் அவற்றுள் ஒன்றான சிவராத்திரிக்கு மட்டும் " மகா " என்று அடைமொழி கொடுத்து அதனை உயர்வாக எண்ணுவது ஏன் என் னும் எண்ணம் எம்முள் எழுகிறதல்லவா ? அப்படி அந்த நாளில் சிவராத் திரி அமைவதற்கு ஆன் மீகம் முக்கியமா அல்லது அதனுடன் அறிவியல் முக்கியத்துவப்படுத்த ப்படுகிறதா என்ன்னும் சிந்தனைகள் எழுகின்றன அல்லவா !

எங்களின் சமயம் வாழ்வியல் நெறிகளை முழுவதுமாய் உள்ளடக்கிய சமயமாகும். உணவு சம்பத்தப்படு கிறது. உடை சம்பத்தப்படுகிறது.உடற் சுத்தம் சம்பத்தப்படுகிறது. பரம்பொருளைப் பாடிப்பரவுதற்கு நல்லு டலும், நல்லாரோக்கியமும் அடிப்படையாகும். உடலின் ஆரோக்கியத்துக்கு உணவு என்றுமே இன்றியமை யாததாகும். இவை அனைத்தையும் தாங்கி நிற்பதா கவே எங்கள் சமயம் " விரதம் " என்னும் நிலையினை ஏற்படுத்தி இருக் கிறது எனலாம். அது கூடத் திட்டமிடப்பட்டே இருக்கிறது என்பது நோக்கத்தக்கதாகும். விரதம் என்று சொல்லும் வேளை அங்கே கோள்கள் சம்பந்த ப்படுகின்றன. திதிகள் சம்பந்தப்படுகின்றன. கோள்களினால் நாள்கள் அமை கின்றன. நாட்களும், திதிகளும் ஆன்மீக மார்க்கத்தில் தத்துவத்தை , அறி வியலைக் குறித்திடும் நுட்பமான சொற்கள் என்பதை யாவரும் கருத்திருத்தல் அவசியமேயாகும். இதன் அடிப்படையில்த்தான் நாம் " மகா சிவராத்திரியை " பார்ப்பது பொருத்தமாக இருக்கும்.

சமயத்தின் நுட்பமான கருத்துக்களை யாவரும் விளங்க வேண்டும் என்ப தற்காகவேதான் கதைகள் வந் தன. கதைகளின் இன்னுமொரு நிலைதான் புராணங்கள் என்றுகூட எடுத்துக்கொள்ள்ளலாம். அந்த வகை யில் சிவராத்திரி எப்படி ஏற்பட்டது என்பதற்கு பல கதைகள் வழக்கில் வழங்கி வருவது அனைவரும் அறிந் ததேயாகும். கதைகளை வைத்துக் கொண்டு சமயத்தையோ அல்லது அதன் தத்துவத்தையோ விமர்சிப் பதோ அல்லது கேலியாகப் பேசுவதோ ஏற்புடையதல்ல. இனிப்புத் தடவி அதனுள் மருந்தினை வைத்துக் கொடுப்பது போலத்தான் , புராணக் கதைகள் சமய உண்மைகளை எடுத்து உரைக்கி ன்றன என்பதுதான் உண்மை நிலையாகும்.

திருப்பாற் கடலைக் கடைந்த பொழுது எழுந்த ஆலகால விஷத்தை எம்பெருமான் ஏற்று -தானே உண்டாரெ ன்பதும், பிரம்மாவும் , விஷ்ணுவும் ஆணவத்தால் முரண்பட்டு யார் பெரியவர் என்று நின்ற நிலை யில் எம் பெருமான் ஜோதிப் பிளம்பாகத் தோன்றினார் என்றும் ஆவர்கள் அந்த ஜோதியின் அடியையும் முடியையும் தேடியும் காணொணா நிலையில் எம் பெருமான் அவர்களுக்கு உண்மையினை உணர்த்தினார் என்பதும்,

கண்ணப்பருக்கு எம்பெருமான் காட்சி கொடுத்தரென்றும், பஞ்சபாண்டவர்களில் ஒருவனான அர்ச்சுனனு க்கு பாசுபாஸ்திரம் கிடைக்கச் செய்தாரென்றும், யமனிடமிருந்து மார்க்கண்டேயரை எம்பெருமான் காத்த தினமென்றும் , பல கதைகள் வழக்கில் இருந்து வருகின்றன என்பது நோக்கத்த த்தக்கது. இவைதான் சிவ ராத்திரி என்றால் இதற்கு அப்பாலும் சிவராத்திரியின் சிறப்பு இருக்கிறது என்பதுதான் மிகவும் முக்கிய மாகும். அதுதான் - மகாசிவராத்திரி என்று மாசியில் ஏன் சிறப்பாக்கினார்கள் எங்கள் முன்னோர்கள் என்னும் அறிவியல் அணுகு முறையாகும்.

நாங்கள் அனைவருமே பூமியிலேயே இருக்கிறோம். பிறப்பும் ,இறப்பும் யாவருக்கும் இந்தப் புவியி லேதான்.உலகம் என்பது நாம் வாழுகின்ற இடம். இந்த உலகம் இயங்குவதற்கு ஒரு சக்தி கட்டாயம் தேவையானதுதானே. அந்தச் சக்தியைத்தான் " ஈத்தர் " என்று அறிவியல் சொல்லுகிறது.ஈத்தர் என்னும் சக்தியானது அண்டம் முழுவதுமே நிறைந்தே இருக்கிறது என்று அறிவியல் பகர்கிறது,

பூமியானது சூரியனை சிறிய நீள்வட்டப் பாதையிலும் பெரிய நீள்வட்டப் பதையிலுமாக இரண்டு பாதை யில் சுற்றி வருகிறது என்பது வானியல் அறிவாகும். இவ்வாறு பூமி சுற்றி வரும்பொழுது பெரிய நீள்வட்டப் பாதையில் இருந்து சிறிய நீள்வட்டப் பாதைக் கு மாறுகின்ற நேரமாகத்தான் எங்களின் " மகாசிவராத்திரி " வரும் நேரம் அமைகிறது என்பதும் நோக்கத்தக்கதாகும். ஈத்தர் சக்தியானது எப்பொ ழுதுமே பூமியை நோக்கி வந்துகொண் டே இருக்கிறது. ஒவ்வொரு மாதத்திலும் வரும் சிவராத்திரியில் ஈத்தர் சக்தியின் அளவு அதிகமாகவே இருக்கும். ஆனால் வருடத்தில் ஒருமுறை வரும் மாசி மாத சிவராத்திரியில் மட்டு மே ஈத்தர் சக்தியின் அளவு அபரிதமாக இருக்கும். இப்படி அபரிதமாக இம்மாதத்தில் வருடத்துக்கு ஒரு முறை அமைவதால் இக்காலத்து வருகின்ற சிவராத்திரியை " மகாசிவராத்திரி " என்று உயர்வுடன் போற் றும் நிலை ஏற்பட்டது என்பதை யாவரும் கருத்திருத்தல் அவசியமானதாகும் .

மாசிமாதத்தில் வருகின்ற ஈத்தருக்கு அதிக சக்தி காணப்படுகிறது. ஈத்தர் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி நகரும். பூமியானது கிழக்கிலிருந்து மேற்கு நோக்கிச் சுற்றிக் கொண்டிருக்கும். எனவே நேரடியாக முழுச்சக்தியும் கிடைக்கும் நிலை இந்த மகா சிவராத்திரிக்கே வாய்க்கிறது.

மகாசிவராத்திரி அன்று விரதம் இருந்து கண்விழித்து

## சிவனைக் குறிக்கும் சிறந்திடு விரதம் !

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண் .... ஆஸ்திரேலியா

ஆடும் அரவும் அழகுடை நிலவும்
ஓடும் நதியும் உயர்சடை வைத்தான்
காடுடை சுடலைப் பொடியினை எடுத்து
தோடுடை செவியன் சுந்தர மாக்கினான்

அடியா ரழைத்தால் அங்கே நிற்பான்
அன்பே அவனின் அகமா யிருக்கும்
ஆசை யடங்கினால் அருகே அணைவான்
மாசை அகற்றும் மாணிக்கம் ஆவான்

ஆலம் வந்தால் அதையும் ஏற்பான்
ஆழ அன்பை அணைத்தே நிற்பான்
சீலம் உடையார் சிந்தை வருவான்
சிவனே என்றால் சிறப்பும் தருவான்

கால காலனைக் காலால் உதைத்தான்
கருத்துடைப் பக்தனை மீட்டான் கருணையால்
பாலன் அழுதான் பாலும் கொடுத்தான்
பக்தர் துடித்தால் பதறுவான் பரமன்

ஆதியு மில்லான் அந்தமு மில்லான்
அவனின் முன்னே ஆணவமும் எழுந்தது
பிரமன் தானே பெரியவன் என்றான்
திருமால் மறுத்துத் தானே என்றான்

ஆணவ மடக்க அரனும் எண்ணினான்
அவர்களின் முன்னே ஜோதியைக் காட்டி-
னான்
ஜோதியின் முடியை ஜோதியின் அடியைக்
காணுவார் பெரியர் ஒலித்தது பேரொலி

ஒலியைக் கேட்டவர் ஒளியைத் தேடினார்
அடியையும் காணா முடியையும் காணா
அவரவர் தேடியே அலைந்துமே நிற்க
ஆனந்த ஜோதி அரனாய் ஒளிர்ந்தது

பிரமன் திருமால் பெம்மானைப் போற்றினர்
மருளுடை எண்ணம் மறைந்தே போனது
அருளுடன் சிவனும் அணைத்தே நின்றான்
ஆணவம் பொடிப்பொடி ஆகியே நின்றது

பெருமான் சிவனைப் பேணியே நிற்க
உருகியே அடியார் விரதம் இருப்பார்
சிவனைக் குறிக்க சிறந்திடு விரதமாய்
அமையும் விரதம் சிவராத்திரி ஆகும்

அடியை முடியை தேடிய சம்பவம்
சிவனின் ராத்திரி செப்பியே நிற்கும்
ஆணவம் போக்கிடும் அற்புத விரமாய்
சினார் ராத்திரி சிறப்புடன் திகழும்

விஞ்ஞான உண்மைகள் நிறைந்ததே விரதம்
மெய்ப்பொருள் அதனுடன் இணைவதே தத்-
துவம்
ஆன்மீகம் அறிவியல் அமைவதே சமயம்
அனைவரும் அகத்தில் இருத்துதல் அவசியம்

பசித்தும் விழித்தும் இருப்பது விரதம்
பசித்து விழித்து இருப்பது பக்குவம்
பசித்தும் விழித்தும் பக்குவம் மிகுந்தால்
பரமனைப் பார்க்கும் பதவியும் கிடைக்கும்

உண்மைகள் என்பது உயிர்ப்புடன் இருக்கும்
உண்மைகள் என்றுமே உறங்கிட மாட்டா
உயர்வுடை உண்மைகள் இறைவனே ஆகும்
உணர்வெலாம் இறையினை இருத்தியே
வைப்போம்

காலைக்கதிர்
Kalaikkathir

# மகாசிவராத்திரியின் மகத்துவம்



முதுகை நேராக வைத்து தியானம் செய்யும் பொழுது ஈத்தர் உச்சந்தலையில் உள்ள சகஸ்ரார சக்கரத்தின் வழியாக பீனியல் கிளாண்ட் என்ற ஆனந்த சுரப்பி மூளையை அடைந்து பல வித நல்ல ஹார்மோன்களைச் சுரக்கச் செய்கிறது. இந்த நேரத்தில் நமக்கு நாமே ஆசீர்வாதம் (ளுநடக டீடநளளளைபெ ) செய்து கொள்ளும் பொழுது இது நமது டி என் ஏ ( னுயேு ) ல் கெட்ட பதிவு களை ( கர்மா ) அழிக்கும் வல்லமையை உருவாக்குகிறது.

ஈத்தர் சக்தி என்பது பகலிலும் உண்டு. இரவிலும் உண்டு. பகலில் சூரிய வெளிச்சம் காரணமாக சற்று க்குறைவாகவே காணப்படும். ஆனால் இரவில் சூரிய வெளிச்சம் காணப்படாமையினால் ஈத்தர் சக்தியின் அளவு அதிகமாகவே இருக்கும். இரவு ஒன்பது மணி தொடக்கம் அதிகாலை இரண்டு மணிவரை உடலின் இயக்கமும் வித்தியாசமாய் இருக்கும். இவ்வேளை ஈத்தர் சக்தியின் அளவும் கூடதலாகவே அமையும் நிலை காணப்படுவதால் இவ்வேளையிலே கட்டாயம் விழித்திருப்பது அவசியமாகிறது. எனவேதான் மகாசிவ ராத்திரியின் முக்கிய சாமமாக இந்த நேரம் எமது சமயரதியாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறது.

ஆன்மீகத்துடன் அறிவியலைச் சித்தர்கள் இணைத்தே விட்டார்கள். சித்தர்களின் நோக்கில் சிவராத்திரி என்பது மிகவும் முக்கிய தினமேயாகும். அதுவும் மகாசிவராத்திரி உடலையும், உள்ளத்தையும் நல்லநிலையில் வைப்பதற்கு மிகவும் உகந்த தினம் என்பதே அவர்களின் தீர்க்கமான முடிவாகும். சித்தர்களின் சிந்தனை பலருக்கும் விளங்க மாட்டாது. ஆனால் அவர்கள் உண்மை நிலையினையே உரைத்து நிற்பார்கள்.

பசித்திருத்தல் என்பதும் தத்துவார்த்தமானது. அதாவது இறையுணர்வினைப் பெறுவதற்கு பசித்திருக்க வேண்டும். தனித்திருத்தல் என்பது தனிமையாக இருப்பதன்று. மனத்தினை அலையவிடாமல்ஒரு நிலை யில் வைத்திருப்பதாகும். விழித்திருத்தல் என்றால் நித்திரை செய்யாது இருப்பதல்ல. மனத்தை எங்குமே செல்ல விடாது இறை நினைப்பை நாடி விழித்திருக்கும் நிலையினையே குறிப்பதாகும். இம்மூன்றையும் மகாசிவராத்திரின் முக்கிய நிலையாக நாம் அனைவரும் கொள்ளுதல் வேண்டும்.

விரதம் என்றாலே கட்டுப்பாடு என்றுதானே அர்த்தப்படும். கட்டுப்பாடு என்பது உடலுக்கு மட்டுமல்ல. உள்ளத்துக்குந்தான் என்பதை உணர்த்துவதே விரதத்தின் உயர் நிலையாகும்.மகாசிவராத்திரியில் உடல் கட்டுப்படுகிறது.உள்ளமும் கட்டுப்படுகிறது. எம்முள்ளே அபரிதமான ஒரு சக்தியும் உள்நுழைகிறது. அந்தச் சக்தியினை உள்வாங்கும் பக்குவத்தை நாம்தான் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

" தேடிக் கண்டு கொண்டேன் - திரு மாலொடு நான் முகனும்

**தேடிக் தேடொணத் தேவனை யென்னுளே தேடிக்**
**கண்டு கொண்டேன் "**

**இதுதான் உண்மையான நிலையாகும். அந்தத் தேவனை நாங்கள் அனைவருமே காணலாம். அதற்காகத்தான் யாவரும் – பசித்து, தனித்து , விழித்து , இருத்தல் அவசியமாகிறது.**

சிவனே முழுமுதற் கடவுள். சிவனே அனைத்துக்கும் காரணமாய் இருக்கிறார். அவரின்றி ஓர் அணுவுமே அசையாது. ஆதியும் அவரே. அந்தமும் அவரே. இருளும் அவரே. அதையகற்றும் பேரொளியும் அவரே. அவரை முன்னிலைப்படுத்தும் பெருவிரதமாக எங்கள் சமய நெறி கைகாட்டி நிற்பதுதான் " மகாசிவரா த்திரி " ஆகும். அந்தப் புனிதமான தினத்திலே " தொல்லை இரும்பிறவி சூழும் தளை நீக்கி - அல்லல் அறுத்து ஆனந்தம் " தரும் வண்ணம் , எல்லையில்லா அன்புடன் யாவரும் அந்தச் சிவப்பரம்பொருளை இறைஞ்சி நிற்போம்.

**இல்லக விளக்கது விருள் கெடுப்பது**
**சொல்லக விளக்கது சோதி யுள்ளது**
**பல்லக விளக்கது பலரும் காண்பது**
**நல்லக விளக்கது நமச்சி வாயவே**



## தேசபந்துவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேரவை ஆகியன குறித்த மனுவின் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளன.

தேசபந்து தென்னகோனை பொலிஸ்மா அதிபராக நியமிப்பதற்கு அரசியலமைப்பு பேரவை உத்தியோகபூர்வமாக அங்கீகாரம் வழங்கவில்லை என மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## அரசின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாணய நிதியத்துடனான வேலைத்திட்டத்தை இலங்கை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவதால், அதன் பிரதிபயன்களை காண முடிந்துள்ளதாகவும் பீட்டர் ப்ரூவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் பொருளாதாரம் மீண்டும் வலுவடைந்துள்ளமை மகிழ்ச்சிக்குரியதெனத் தெரிவித்த அவர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அர்ப்பணிப்புக்கும் பாராட்டு தெரிவித்தார்.

இதன்போது நாட்டை பொருளாதாரச் சரிவிலிருந்து மீட்பதற்கான ஆளும் தரப்பின் திட்டம் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டு வருவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சுட்டிக்காட்டினார்.

இலங்கை அடைந்துள்ள முன்னேற்றத்தை அங்கீகரிப்பதானது இலங்கைக்கும் சர்வதேச நாணய நிதியத்திற்கும் இடையிலான பொருளாதார வளர்ச்சியை எட்டுவதற்காக ஏற்றுகொள்ளப்பட்ட கூட்டு முயற்சியை வலியுறுத்துவதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அதனையடுத்து இலங்கையின் நிதி ஸ்திரத்தன்மை, கட்டமைப்பு ரீதியான மறுசீரமைப்புகள், எதிர்கால நோக்கு தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதுடன், நாட்டின் பொருளாதார செயற்பாடுகளின் பலதரப்பட்ட விடயப்பரப்புக்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

பொருளாதார சவால்களை எதிர்கொள்வதற்காகவும் நிலையான பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கும் இரு தரப்புக்கும் இடையேயான தொடர்ச்சியான ஒத்துழைப்பின் முக்கியத்துவம் குறித்தும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

இலங்கை சார்பில் நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன. , ஜனாதிபதியின் பொருளாதார விவகாரங்களுக்கான சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ்.சமரதுங்க, பணிக்குழாம் பிரதானி அலுவலகத்தின் பணிப்பாளர் ஷிரந்த ஹேரத் ஆகியோரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

சர்வதேச நாணய நிதியத் தூதுக்குழுவின் பிரதிதலைவர் கத்யா ஸ்விரிட்சென்கா வதிவிடப் பிரதிநிதி கலாநிதி. சர்வத் ஜஹான், சோபியா ஜாங், சந்தேஷ் துங்கனா, ஹோடா செலிம், டிமிட்ரி ரோஸ்கோவ், மார்க் எடம்ஸ் ,ஹூய் மியாவோ, சம்ஸன் குவாலிங்கனா மற்றும் மானவீ அபேவிக்ரம உள்ளிட்ட சர்வதேச நாணய நிதியக் குழுவின் உறுப்பினர்களும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர்.

## கடினமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயணம் குறித்து, நாளிதழ்களில் வெளியான 618 கேலிச்சித்திரங்கள் இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன.

இந்நூலின் முதல் பிரதியை நாடாளுமன்ற உறுப்பினர் வஜீர அபேவர்தன ஜனாதிபதிக்கு வழங்கிவைத்தார். அத்துடன் 40 கேலிச்சித்திர கலைஞர்கள் மற்றும் 20 ஊடகவியலாளர்கள் இந்த படைப்புக்குப் பங்களிப்புச் செய்துள்ளனர். அவற்றை தொலைக்காட்சியின் ஊடாக வெளியிட்ட கலைஞர்களுக்கு ஜனாதிபதி பாராட்டு தெரிவித்தார்.

இந்நூல் வெளியீட்டு விழாவில் இந்திய புகழ்பெற்ற கேலிச்சித்திர கலைஞர் நள பொன்னப்பா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். பேராசிரியர் ரொஹான் நெட்டசிங்கவால் நூல் பற்றிய விமர்சன விரிவுரையை நிகழ்த்தப்பட்டது.

ஜனாதிபதி அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இந்தக் கேலிச்சித்திரங்களின் தொகுப்பு ஒரு பாரம்பரிய பணியை நிறைவேற்றியுள்ளது. ஜே.ஆர். ஜெவர்த்தன, சேர் ஜோன் கொத்தலாவல ஆகியோரின் வீடுகளில் இவ்வாறான தொகுப்புக்களைக் கண்டிருக்கிறேன். அதனால் இன்று வஜீரவும் அவ்வாறான சம்பிரதாயபூர்வமான பணியை நிறைவேற்றியுள்ளார்.

இந்தத் தொகுப்பில் குறிப்பிடப்படும் 2021-2023 காலகட்டத்தை இப்போது மறந்துவிட்டோம். நான் பதில் ஜனாதிபதியாகப் பதவிப் பிரமாணம் செய்துகொண்ட தருணத்தில் சித்தரிக்கப்பட்ட காட்சி இந்தப் புத்தகத்தில் இடம்பெற்றிருந்ததைக் கவனித்தேன். அந்த நேரத்தில் சத்தியப் பிரமானம் செய்ய இடமிருக்கவில்லை. அரச அலுவலகங்களில் செய்தால் அதற்கு தீ மூட்டிவிடுவார்கள் என்ற அச்சம் காணப்பட்டது.

பின்னர் பிரதம நீதியரசருக்கு அறிவிக்கப்பட்டு வாலுக்காராமய விகாரையில் வைத்து சத்தியப் பிரமாணம் செய்துகொண்டேன். அப்போது நாட்டின் நிலைமை அவ்வாறானதாக இருந்தது. வன்முறைக் கும்பல் நாடாளுமன்றத்தைச் சுற்றிவளைக்க முற்பட்டது. இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் அதனைத் தடுத்து நிறுத்த முடிந்தது.

நாட்டில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. இந்த நேரத்தில் மாத்திரம் 2000 கேலிச்சித்திரங்கள் வரையப்பட்டுள்ளன. நாம் ஒரு சர்வாதிகார ஆட்சியை நடத்தியிருந்தால் அத்தகைய படைப்புகள் பிறந்திருக்காது. இவ்வாறான படைப்புக்கள் ஜனநாயகத்தின் ஓர் அங்கமாகும். அவதூறு சட்டத்தில் இருந்து விடுபட முடிந்ததில் பெருமை கொள்கிறேன்.

இன்று புத்தகங்கள் எழுதலாம். தொலைக்காட்சி, வானொலி, திரைப்படம் என எந்த வகையிலும் படைப்புக்களை உருவாக்கலாம். அந்த சுதந்திரம் இருக்கிறது. 1931 இல் இந்த நாட்டில் சர்வஜன வாக்குரிமை அறிமுகப்படுத்தப்பட்டது. அன்றிலிருந்து இந்த நாட்டில் ஜனநாயக முறை நடைமுறைப் படுத்தப்பட்டது.

எதிர்க் கட்சிகளைத் தடை செய்யவில்லை. எதிர்க்கட்சித் தலைவர்கள் சிறையில் அடைக்கப்படவில்லை. பிரச்சினைகள் இருந்தன. ஆனால் ஒரு தேர்தலுக்குப் பிறகு முடிவுகளை ஏற்றுக்கொண்டு அதற்கேற்ப தோல்வியை ஏற்றுக்கொண்டு ஆட்சியை விட்டு வெளியேறினர். ஆசியாவிலேயே இப்படி நடந்த ஒரே நாடு இலங்கைதான். நம்மிடையே எத்தனை பிரச்சனைகள் இருந்தாலும் ஜனநாயகத்தை மதிக்கிறோம்.

இந்த கார்ட்டூன்கள் அனைத்தும் நாட்டில் உள்ள சுதந்திரத்தைக் காட்டுகின்றன. இந்த வருட இறுதியில் ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல்கள் நடைபெறும் போதும் இவ்வாறான கேலிச் சித்திரங்கள் குறையப்போவதில்லை. மாறாக அவை அதிகரிக்கும். இந்த ஜனநாயக சுதந்திரத்தை நாம் முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

நான் மிகவும் கடினமான நேரத்தில் நாட்டைப் பொறுப்பேற்றுக் கொண்டேன். நாட்டின் அரசியல் சரிவடைந்து கிடந்தது. ஆனால், எம்மால் பொருளாதாரத்தை நல்ல நிலைமைக்கு கொண்டு வர முடிந்தது. நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் இணைந்து செயற்பட்டோம். அந்த ஜனநாயகத்தையே இந்த சித்திரங்கள் பிரதிபலிக்கின்றன.

இந்தக் காலப்பகுதியில் நாம் சிரமப்பட்டு முன்னெடுத்த வேலைத்திட்டத்தினால் நாட்டின் பொருளாதாரத்தை சாதகமான நிலைக்கு கொண்டு வர முடிந்தது. நாம் எதிர்கொள்ளும் கடினமான காலத்தின் கடைசிப் பகுதி இதுவாகும். இன்று சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினேன். நாங்கள் இதுவரை செய்த அனைத்து செயற்பாடுகளும் வெற்றியளித்துள்ளதாக குறிப்பிட்டனர். எமக்கு கடன் வழங்கிய நாடுகளின் குழுவின் தீர்மானங்களுக்கமைய, தனியார் கடன் வழங்குநர்களும் அவர்களின் கருத்துக்களை தெரிவிக்க உள்ளனர். நாம் முன்னெடுக்கும் வேலைத்திட்டம் வெற்றிகரமான பிரதிபலனைத் தரும் என்பதில் சந்தேகமில்லை.

நேற்றைய தினம் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா ஆளும் தரப்பின் கடன் தொடர்பான கலந்துரையாடல்களில் எதிர்க்கட்சிப் பிரதிநிதிகளை ஈடுபடுத்த வேண்டும் என்ற யோசனையை முன்வைத்தார். அதன்படி, அந்த யோசனைகள் அனைத்தையும் சர்வதேச நாணய நிதியத்துடன் விவாதித்து அவர்களின் இறுதி முடிவின்படி செயல்பட எதிர்க்கட்சிகள் உட்பட அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்து கலந்துரையாட முடியும். எனவே, அனைவரும் இணைந்து இந்தப் பயணத்தை மேற்கொள்ள முடியும் என நம்புகிறேன்.

இந்த இக்கட்டான காலங்களில் இந்த கேலிச்சித்திரங்கள் எமக்கு நிவாரணமாக அமைந்தன. அதனால் வாழ்க்கையை எளிதாகப் பார்க்க முடிந்தது. இப்போது நாம் அனைவரும் நிலையான எதிர்காலத்தை நோக்கிச் செல்ல வேண்டும். எதிர்க்கட்சிகளையும் ஒன்றிணைப்பதன் மூலம் அந்த செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல முடியும் என நான் நம்புகிறேன். அதேபோல் கேலிச்சித்திரக் கலைஞர்கள் அனைவருக்கும் நன்றி கூறுகிறேன் என்றார்.

## பராட்டே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

பராட்டே சட்டத்தை எதிர்வரும் டிசெம்பர் 15 வரை தற்காலிகமாக இடை நிறுத்த அமைச்சரவை எடுத்த தீர்மானம் நடைமுறையில் செயற்படுத்தப்படவில்லை.

வர்த்தக வங்கிகள் அந்தச் சட்டத்தின் பிரகாரம் இன்றும் நடவடிக்கை எடுத்துவருகின்றன. அதனால் பராட்டே சட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு மத்திய வங்கி ஊடாக இந்த வர்த்தக வங்கிகளுக்கு எழுத்து மூலம் அறிவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். ஏனெனில் கடந்த வாரம் தொடர்ச்சியாக பத்திரிகைகளில் பராட்டே சட்டத்தின் கீழ் கைத்தொழிலாளர்கள் பலரின் சொத்துக்களை ஏலத்தில் விடுவதற்கு விளம்பரம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக வர்த்தக வங்கிகளே இந்த விளம்பரத்தை பிரசுரித்தன.

மத்திய வங்கியே நாட்டின் வங்கி கட்டமைப்பை கண்காணித்து வருகின்றது. அதனால் மத்திய வங்கி ஊடாக வர்த்தக வங்கிகளுக்கு சுற்றிக்கை ஒன்றை அனுப்பி, பராட்டே சட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்த ஆளும் தரப்பு எடுத்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்துமாறு கோரிக்கை விடுக்க வேண்டும்.

நுண், சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழிலாளர்களைப் பாதுகாக்கும் வகையில் பராட்டே சட்டத்தை தற்காலிகமாக நிறுத்தி வைக்க ஆளும் தரப்பு எடுத்த தீர்மானத்துக்கு நானும் நன்றி செலுத்தினேன். ஆனால் இன்று அந்தத் தீர்மானம் பிழையான வழியில் செல்வதாக இருந்தால், அது ஆளும் தரப்புக்கே அவப்பெயரை ஏற்படுத்தும்.

மத்திய வங்கிக்கு தங்களின் சம்பளத்தை நூற்றுக்கு 70 வீதம் வரை அதிகரித்துக்கொள்ள முடியுமானால், இந்த நாட்டில் நுண் கடன் பெற்ற கைத்தொழிலாளர்கள் இலட்சக்கணக்கில் இருக்கின்றனர். அவர்களுக்காக மத்திய வங்கி தனது கடமையைச் செய்யவேண்டும். எனவே ஆளும்தரப்பு மத்திய வங்கி ஊடாக வர்த்தக வங்கிகளுக்கு கடிதம் அனுப்பி, பராட்டே சட்டத்தின் ஊடாக சாதாரண கைத்தொழிலாளர்களின் சொத்துக்களை ஏலத்தில் விடுவதை உடனடியாக நிறுத்துமாறு உத்தரவிட வேண்டும்.

அவ்வாறு இல்லாமல் குறித்த சட்டத்தில் திருத்தம் செய்து அதனை மேற்கொள்ளும் காலப்பகுதிக்குள் குறித்த வங்கிகள் கைத்தொழிலாளர்களின் சொத்துக்களை விரைவாக ஏலத்தில் விட்டு விடுவார்கள்.

அதனால் அமைச்சரவையில் எடுத்த தீர்மானத்துக்கமைய உடனடியாக இந்த சட்டத்தை செயற்படுத்துவதை இடை நிறுத்த ஆளும் தரப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

## கஜிமாவத்தையில் வீடற்றவர்களுக்கு அரச வீடுகள்

கொழும்பு கஜிமாவத்தையில் வசிக்கும் அனைத்து வீடற்ற குடும்பங்களுக்கும் வீடுகளை வழங்கத் தேவையான பணிகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

ஆளும் தரப்பின் வீடுகள் வழங்கும் கொள்கைகள் மற்றும் அளவுகோல்களுக்கு அமைவாகவே இப்பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டுமெனவும் ஜனாதிபதி அறிவித்தார்.

கொழும்பு கஜிமாவத்தை வீட்டுப் பிரச்சினை தொடர்பில் நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

கொழும்பு மாநகரப் பகுதிக்குள் அரசுக்குச் சொந்தமான, பயன்படுத்தப்படாத கட்டடங்கள் மற்றும் காணிகள் தொடர்பில் ஆராய்ந்து அந்தக் காணிகளை அபிவிருத்தி செய்து வர்த்தக நடவடிக்கைகளுக்கு வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பில் கவனம் செலுத்துமாறு ஜனாதிபதி, அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

அரசதுறையின் தலையீட்டுடன் தனியார் முதலீடுகள் ஊடாக இந்த வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அத்துடன், கொழும்பு நகர எல்லையில் தற்போது அமுல்படுத்தப்பட்டுவரும், அரசாங்க வீடமைப்புத் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆராய்ந்த ஜனாதிபதி, மேலும் வீடமைப்புத் திட்டங்களை அரசாங்கம் அமுல்படுத்த வேண்டியதன் அவசியத்தை விளக்கினார்.

தற்போதைய பொருளாதாரச் சூழ்நிலையில் இந்தப் பணிகள் சிரமமானதாக இருந்தாலும் பொருத்தமான முறைமையைத் தயாரிக்குமாறு சுட்டிக்காட்டினார்.

முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ. சத்தியானந்த, கொழும்பு மாவட்ட செயலாளர் கே.ஜி. விஜேசிறி, கொழும்பு மாநகர ஆணையாளர் பத்ராணி ஜயவர்தன மற்றும் துறைசார் நிறுவன அதிகாரிகள் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.




காலைக்கதிர் Kalaikkathir

## வெடுக்குநாறி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கியிருந்தது. அந்த உத்தரவை செவ்வாய்க்கிழமை (5) நீதிமன்றம் மீண்டும் உறுதிசெய்திருந்தது. அப்படியிருந்தும் அங்கு பூசை செய்யச் சென்றவர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## மின் கட்டணக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு 30% கடடண குறைப்புச் செய்யப்பட்டுள்ளது. மேலும் 90 - 180 இடையிலான பாவனை யாளர்களுக்கு 24% இனால் கட்டண குறைப்புச் செய்யப்பட்டிருக்கிறது.

180 அலகுகளுக்கு மேலான வீட்டு பாவனையாளர்களுக்கு 18% கட்டண குறைப்பும் வழிபாட்டுத் தலங்களுக்கு 33% கட்டண குறைப்பும் ஹோட்டல் மற்றும் தொழில்துறை துறைகளுக்கு 18% கட்டண குறைப்பும் அரச துறைக்கு 23% கட்டணக் குறைப்பும் தனியார் துறைக்கு 22% கட்டண குறைப்பும் செய்யப்பட்டுள்ளது.

இருப்பினும் அதற்கு நிகராக உணவு விலைகள் குறைக்கப் பட்டுள்ளதாஎன்பதுகேள்விக்குரியாக உள்ளது. பொதுச் சேவைகளில் ஈடுபடுவோரால் மக்களுக்கு பெருமளவான நிவாரணங்கள் வழங்கப்படவேண்டும். அதனை மின்சார சபையோ அல்லது அமைச்சுக்களோ செய்ய முடியாது என்பதே எனது நிலைப்பாடாகும்.

அண்மைக் காலமாகக் கிடைத்த மழைவீழ்ச்சியின் காரணமாக, மின் உற்பத்தி செயல்பாட்டில் உள்ள பிரச்னைகள் குறைந்துள்ளன. அதன் பயனாக 2022 ஆம் ஆண்டில் ஏற்பட்ட 270 பில்லியன் ரூபா இழப்பீட்டையும் சரிசெய்ய முடிந்தது. இருப்பினும் இருள் யுகத்தில் கிடந்த நாடு பொருளாதார முன்னேற்றம் கண்டு வருவதன் பயனாகவே மின்சார கட்டணத்தை குறைக்க முடிந்துள்ளது.

அதனால் மின்சார உற்பத்திச் செலவு பெருமளவில் குறைவடைந் துள்ளதோடு, மூன்றிலக்க பெறுமதியாக காணப்பட்ட வட்டி வீதம் குறைக்கப்பட்டுள் ளமையும் பெரும் வாய்ப்பாக அமைந்துள்ளது.

இந்திய கடனின் கீழ் பெறப்பட்ட 100 மில்லியன் டொலர்களில் முதல் பகுதியைக் கொண்டு, பாடசாலைகள், பாதுகாப்பு முகாம்கள், பல்கலைக்கழகங்கள், மதவழிபாட்டுத் தலங்கள் போன்ற பொது இடங்களில் மின்சாரம் பெறுவதற்கு சூரிய சக்தி படலங்களை வழங்கும் பணியைமேற்கொண்டுவருகிறோம். மின்கட்டணத்தைமேலும்குறைக்க, தற்போதுள்ள மின் உற்பத்தி நிலையங்கள் அல்லது தற்போது அதிக விலைக்கு மின்சாரம் கொள்வனவு செய்வதை விடுத்து குறைந்த செலவிலான மாற்று முயற்சிகளுக்கு செல்ல வேண்டும்.

2025 ஆம் ஆண்டில் சியாம்பலாண்டுவ மின் உற்பத்தித் திட்டத்தை தேசிய மின்கட்டமைப்பில் இணைக்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. இதனால் நூறு மெகாவோட் மின்சாரத்தை 25 - 26 ரூபாய்க்கு பெற்றுகொள்ள முடியும். இதேபோன்ற பல பெரும் மின் உற்பத்தி திட்டங்கள் குறித்து ஆராய்ந்து வருகிறோம். அதற்காக ஏராளமான முதலீட்டாளர் கள்எம்மோடுஇணைந்துகொண்டுள் ளனர். உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு புதிய முதலீட்டாளர்களுக்காக 10 காற்றாலை மற்றும் சூரிய ஒளி திட்டங்கள் திறக்கப்பட்டுள்ளன. மன்னார் பகுதியை மையமாக கொண்டு 50 மெகாவாட் காற்றாலைக்கான விலைமனு அடுத்த வாரம் கோரப்படும்.

உரியவர்களுடன் கலந்துரை யாடிஎரிபொருள்விலைச்சூத்திரத்திற்கு அமைவாக எரிபொருள் விலை யினையும் மேலும் குறைக்க எதிர்பார்க்கிறோம்.

அத்துடன், மின்சார சபையின் மறுசீரமைப்பு தொடர்பான வர்த்தமானி கடந்த டிசெம்பர் மாதம் வெளியிடப்பட்டது. இதன்படி, புதிய சட்டத்தில் உள்ள குறைபாடுகள் மற்றும் மாற்றங்களை உரிய தரப்பினரும், அரசியல் கட்சிகள் மற்றும் தொழிற் சங்கங்கத்தினரும் சுட்டிக்காட்டியிருந்தனர். இது தொடர்பான 46 திருத்தங்களுடன் கூடிய சட்டமூலம் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதனையடுத்து அமைச்சரவை அங்கீகாரத்துடன் ஏப்ரல் மாதம் நாடாளுமன்றத்தில் சமர்பிக்க முடியும் - என்றும் அமைச்சர் நம்பிக்கை தெரிவித்தார்.

## ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உண்டு என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன அதிருப்தி வெளியிட்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அமர்வில் வாய்மூல விடைக்கான வினாக்களின் போது காவிந்த ஜயவர்தன உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம் குறித்து கேள்வியெழுப்பினார்.

இந்தக் கேள்விகளுக்கு இரண்டு மாதங்களுக்கு பின்னர் பதிலளிப்பதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சார்பில் சபை முதல்வர் சுசில் பிரேமஜயந்த சபையில் குறிப்பிட்டார். இதற்குப் பதிலளிக்கையிலேயே காவிந்த மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தெரிவித் ததாவது:

உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவின் அறிக்கையில் மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்தன தொடர்பில் சட்டமா அதிபர் ஊடாகப் பரிசீலனைகளை மேற்கொண்டு அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யுமாறும், பொலிஸ் ஆணைக்குழுவினால் ஒழுக்காற்று விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பரிந்துரைக் கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் கேள்விகள் முன்வைக்கும்போது அதற்குப் பதிலளிப்பதற்கு விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சர் சபைக்கு வருகைதருவதில்லை. பதிலளிப்பற்கு இரண்டு மாதங்கள் காலவகாசம் மாத்திரம் கோரப்படுகிறது. நான் மூன்றாவது தடவையாக கேள்வி களை முன்வைத்துள்ளேன்.

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கையின் பரிந்துரைகளை செயற்படுத்துவதற்கு ஆளும் தரப்பு ஏன் பின்வாங்குகிறது? அறிக்கையின் பரிந்துரைகளை செயற்படுத்த ஆளும் தரப்புக்குத் தார்மீக உரிமை உண்டு - என்றார்.

உடனே எழுந்து

உரையாற்றிய சபை முதல்வர் சுசில் பிரேமஜயந்த, இந்தக் கேள்விகள் முதலாவது முறையாக முன்வைக்கப்பட்டுள்ளதாக ஒழுங்குப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கேள்விகளுக்குப் பதிலளிப்பதற்கு காலவகாசம் கோருவதற்கு அமைச்சருக்கு அதிகாரம் உண்டு. ஆகவே இவ்விடயம் தொடர்பில் விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சருக்கு அறிவிக்கின்றேன் என்றார்.




காலைக்கதிர் Kalaikkathir

# இளைஞர்களை போஸ்டர் ஒட்ட அழைப்பவர் மத்தியில் தலைவனாக உருவாக்க அழைத்தவர் எஸ்.எம்.சபீஸ்

## இணைப்பாளர் ஜே.எம்.ஹசான் பெருமிதம்





(நூருல் ஹுதா உமர்)

இளைஞர்களைத் தமது தேவைகளுக்காக பயன்படுத்தும் அரசியல் கலாசாரம் எமது நாட்டில் வேரூன்றிக் காணப்படும் சகாப்தத்தில் எங்களைத் தலைவன் ஆக்குகிறேன் வாருங்கள் என்று அழைத்தவர் அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல்களின் முன்னாள் தலைவரும், கிழக்கின் கேடயம் தலைவருமான எஸ்.எம். சபீஸ் அவர்கள் மாத்திரமே என அண்மையில் இடம்பெற்ற இளைஞர்கள் ஒன்று கூடலின் போது அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ஜே. எம். ஹஸான் தெரிவித்தார்

மேலும் அங்கு அவர் கருத்து தெரிவிக்கையில் -

இளைஞர்களின் முதல் அத்தியாவசிய கடமை கல்வி பயில்வதாகும். ஒவ்வொரு மாணவனும் அரசாங்கம் அல்லது தனியார் துறைகளில் தமது பட்டப்படிப்பை பெற்றுக்கொள்ள வேண்டும். ஒரு சிலர் அரச பல்கலைக்கழகத்துக்கு போனால் தான் கற்றவர்கள் என்ற மாயையை ஏற்படுத்தி நமது சமூகத்தை கல்வி கற்க விடாமல் தடுத்த காலங்கள் மலையேறிப் போகி விட்டன.இன்னொருவருக்கு அநியாயம் செய்யாமல் தமது வாழ்க்கைக்குத் தேவையான வருமானத்தைத் தேடிக்கொள்ளும் அறிவைப் பெற்றுக்கொள்ளுதல் கல்வியின் முதல் நோக்கமாகும் அதற்காக நீங்கள் பட்டப்படிப்பை மேற்கொள்ள வேண்டும்.

அத்தோடு மூன்று, நான்கு இளைஞர்கள் ஒன்று சேர்ந்து புதிய தொழில் முயற்சியில் ஈடுபட்டு பலருக்கு வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பவர்களாக நாங்கள் மாறவேண்டும் என்று உண்மையாக சிந்திக்கும் ஒருதலைவன் எங்களுக்கு கிடைத்துள்ளார். இவ்வளவு காலமும் எங்களை போஸ்டர் ஒட்டவும் கட்சிப் பணிகளை மேற்கொள்ளவுமே பயன்படுத்தினர். முதன் முறையாக எங்களை எங்களுக்காக திறமையானவர்களாக மாற்றிட முயற்சிக்கின்றார் எஸ்.எம். சபீஸ் அவர்கள். அதனால் தான் அதிகமான இளைஞர்கள் கிழக்கின் கேடயத்தின் பின்னால் அணி சேருகின்றனர்.

மேலும் ஒட்டுமொத்த இளைஞர்களுக்கும் நாங்கள் அன்பான வேண்டுகோள் விடுக்கின்றோம். நாம் அடிமைகளாக சிந்திக்க முடியாதவர்களாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு நம்பியவர்களாக இருந்தது போதும் புதிய புரட்சி செய்வோம் புறப்பட்டு வாருங்கள். எஸ் எம் சபீஸ் எனும் கேடயத்தோடு அணி சேர்ந்து புது யுகம் படைப்போம் என்று தெரிவித்தார். (05)

# கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் ஏற்பாட்டில் இந்தியாவிலிருந்து ஆதீனங்கள் வருகை

## கோணேஸ்வரர் சிவாராத்திரி நிகழ்வுக்காக



(நூருல் ஹுதா உமர்)

பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றாக விளங்கும் திருக்கோணேஸ்வரம் இலங்கையின் புகழ்பெற்ற ஆலயங்களுள் ஒன்றாக விளங்குகின்றது. உலகில் உள்ள வழிபாட்டுத் தலங்களில் மிகப்பழைமையானதாகும். இக்கோவில் பதினெட்டு மகா சக்தி பீடங்களில் தேவியின் இடுப்புப் பகுதி விழுந்த பீடமாகவும் தந்திர சூடாமணி கூறும் 51 சக்தி பீடங்களில் தேவியின் சிலம்புகள் விழுந்த பீடமாகவும் கருதப்படுகிறது.7 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தர் இக்கோயிலின் மீது பதிகங்கள் பாடியுள்ளார்.



இவ்வாறு வரலாற்று சிறப்பு மிக்க திருக்கோணேஸ்வர ஆலயத்தில் இடம்பெற்று வருகின்ற சிவராத்திரி நிகழ்விற்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் ஏற்பாட்டில் இந்தியாவில் இருந்து ஆதீனங்கள் இலங்கைக்கு அழைத்து வரப்படுகின்றனர்.

சிவராத்திரி நிகழ்வில் தமிநாடு திருநெல்வேலி பெருங்குளம் திருக்கைலாய பரம்பரை செங்கோல் ஆதீனம்,103 ஆவது குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச சத்தியஞான தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் விசேட அழைப்பாளராக கலந்துகொண்டு ஆன்மீக சொற்பொழிவை வழங்கினார்.

பெருந்திரளான பக்தர்கள் இந்த நிகழ்வுகளில் கலந்துகொண்டு வருகின்றனர். (05)

# கழிவு முகாமைத்துவம் குறித்த விழிப்புணர்வு கலந்துரையாடல்







(எம்.எச்.எம்.சியாஜ்)

கற்பிட்டி பிரதேசத்தில் நீண்ட நாள்களாக நிரந்தர தீர்வுகள் இன்றி காணப்படும் கழிவு முகாமைத்துவம் தொடர்பான விழிப்புணர்வு கலந்துரையாடல் கற்பிட்டி பிரதேச சபையின் செயலாளர் மங்கள ராமநாயக்க தலைமையில் கற்பிட்டி பிரதேச சபையின் கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கழிவு முகாமைத்துவம் பற்றிய முழுமையான விளக்கம் வடமேல் மாகாண கழிவு முகாமைத்துவ அபிவிருத்தி உத்தியோகத்தர் எம். ஏ மாரசிங்க வினால் வழங்கப்பட்டது.

பொலித்தீன் மற்றும் பிளாஸ்டிக் பொருள்களைத் தீயிட்டு எரிப்பதில் இருந்து விளகி மீள் சுழற்சி முறையை நடைமுறைப்படுத்தல் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது.

மேற்படி கலந்துரையாடலில் கற்பிட்டி பிரதேச சபையின் முன்னாள் உப தலைவர், உறுப்பினர்கள், பொலிஸ் அதிகாரிகள், மத ஸ்தானங்களின் பரிபாலன சபை உறுப்பினர்கள், மீனவ சங்கத் தலைவர்கள், சமூக சேவை ஆர்வலர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பணிப்பாளர்கள், கல்விப் பணிமனையின் அதிகாரிகள், பிரதேச செயலக அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# கிழக்கு முஸ்லிம் பிரச்சினை குறித்து ஜனாதிபதி தலைமையில் ஆராய்வு

## ஆளுநர், கிழக்கு முஸ்லிம் எம்.பிக்கள் பங்கேற்பு



(நூருல் ஹுதா உமர்)

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் ஜனாதிபதி செயலகம் ஏற்பாடு செய்த கிழக்கு மாகாண முஸ்லிம் எம்.பிகளுக்கிடையிலான சந்திப்பு நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் இடம்பெற்றது.

இந்த சந்திப்பில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், நாடாளுமன்ற உறுப்பினர்களான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், ஏ.எல்.எம். அதாஉல்லா, எம்.சி. பைசால் காசிம், செய்யத் அலிஸாஹிர் மௌலானா, சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் முதுநபீன் ஆகியோர் பங்கேற்றதுடன் கிழக்கு மாகாண முஸ்லிம்களின் பிரதான பிரச்சினைகள் தொடர்பில் இங்கு நீண்டநேரம் ஆராயப்பட்டதுடன் கிழக்கு மாகாண அண்மைய இடமாற்றத்தில் பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்ட ஆசிரியர்களின் இடமாற்ற பிரச்சினைகள், கிழக்கு மாகாண சிவில் நிர்வாக சேவை அதிகாரிகளின் நியமன விடயங்கள், அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்ட முஸ்லிம்களின் காணி பிரச்சினைகள், மூடப்பட்டுள்ள காத்தான்குடி பள்ளிவாசலில் தொழுகைக்கு அனுமதி வழங்கும் விவகாரம், மட்டக்களப்பு மாவட்ட கல்வி மேம்பாட்டு விடயங்கள் எனப்பல சமூக நல விடயங்கள் கலந்துரையாடப்பட்டு ஆராயப்பட்டது.

இவற்றில் பல விடயங்களுக்கு முழுமையான தீர்வும், சில விடயங்களுக்கு துறைசார்ந்த அமைச்சர்கள், அதிகாரிகளுடன் கலந்துரையாடி முடிவெடுப்பதாக தீர்வு எட்டப்பட்டுள்ளது. இதுவிடயமாக கிழக்கு மாகாண ஆளுநருக்கும்- முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான தொடர்ச்சியான சந்திப்புக்கள் ஊடாக முஸ்லிங்களின் பிரச்சினைகளை பேசி தீர்க்குமாறும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கியிருந்தார். மேலும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்குத் தேவையான போதுமான நிதி ஒதுக்கீடுகளை ஒதுக்கும் விடயங்களும் இங்கு கலந்துரையாடப்பட்டன.

இந்த சந்திப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸின் வேண்டுகோளின் பேரில் ஜனாதிபதி செயலகம் ஏற்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(05)

# அமைச்சர் டக்ளஸை சந்தித்த கிழக்கின் முக்கிய நிர்வாகிகள்





(கே எ ஹமீட்)

கிழக்கு மாகாண ஆளுநர், திருகோணமலை நகரசபைச் செயலாளர் மற்றும் கிண்ணியா நகரசபைச் செயலாளர் ஆகியோர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களை அமைச்சில் சந்தித்து கலந்துரையாடினர்.

திருகோணமலையிலுள்ள பொது மீன் சந்தை , கிண்ணியா மீன் சந்தை தொடர்பான விடயங்கள் விரிவாகக் கலந்துரையாடப்பட்டன.

மேலதிகமாக மட்டக்களப்பு வட்டவான் , கொக்கடிச் சோலை ஆகிய இடங்களில் இறால் பண்ணைகள் தொடர்பாகவும் கிழக்கு மாகாண ஆளுநர் கலந்துரையாடினார்.

இக்கலந்துரையாடலின் போது அமைச்சின் செயலாளர், அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (05)

# அட்டாளைச்சேனை அறபாவின் ஆளுமைகளுக்கு கௌரவம்

(அபு அலா)

அட்டாளைச்சேனை அறபா வித்தியாலயத்தில் கடந்த 2023 ஆம் ஆண்டு க.பொ. சாதாரண தர பரீட்சையில் தோற்றி உயர்தரத்திற்கு உயர்ந்தோரையும், உயர்த்தியோரையும், தரம் 5 புலமைப்பரிசில் பரிட்சையில் சித்தி பெற்றவர்களையும் பாராட்டி கௌரவிக்கும் மாபெரும் விழா நேற்று (வியாழக்கிழமை) இடம்பெறவுள்ளது.

ஐ.எம்.ஜலால்தின் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த மாபெரும் கௌரவிப்பு விழாவுக்கு ஓய்வுபெற்ற வலயக்கல்விப் பணிப்பாளர்களான ஏ.எல்.எம்.காசிம், எம்.சி.ஏ. நௌபித் ஆகியோர் பிரதம அதிதிகளாகவும், பிரதி கல்விப் பணிப்பாளர்களான ஏ.எஸ்.அகமட் கியாஸ், எம்.எம்.சித்தி பாத்திமா, உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.அம்ஜத்கான் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

மேலும், சிறப்பு அதிதிகளாக அட்டாளைச்சேனை கோட்டக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம். றஸ்மி மற்றும் அறபா வித்தியாலய அதிபர் எம்.ஏ.அன்சார் உள்ளிட்ட பாடசாலையின் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

(05)

# அல் பஹ்ரியா தேசிய பாடசாலை விளையாட்டுப் போட்டி ஆரம்பம்




(சர்ஜுன் லாபீர்)

கல்முனை அல் பஹ்ரியா தேசிய பாடசாலையின் பழைய மாணவர் அமைப்பால் வருடாந்தம் நடத்தும் பஹ்ரியன் பிரிமியண்ட் லீக் சீசன்-02 இம்முறையும் இடம்பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் இப்பாடசாலையில் 1996 முதல் 2020 ஆம் ஆண்டு வரை க.பெ.த.(சா/த) பரீட்சையில் மாணவர்கள் தோற்றிய வருடங்களின் அடிப்படையில் போட்டியில் பங்குபற்றுகின்றனர்.

பஹ்ரியன் பிரிமியண்ட் லீக் சீசன்-02 இல் இம்முறை கிரிக்கெட் மற்றும் வலைப்பந்து ஆகிய இருபெரு விளையாட்டுக்களை நடத்துவதற்கு ஏற்பாட்டுக் குழுவினரால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இம் மாதம் (மார்ச்)01 ஆம் திகதி முதல் ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதி வரை விண்ணப்பங்களை மாலை 8.00 மணி முதல் இரவு 10 மணி வரை பாடசாலை பழைய மாணவர் சங்க காரியாலத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

விண்ணப்ப முடிவு திகதியாகிய ஏப்ரல் 1 இற்குப் பிறகு எந்தவொரு விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படா என்பதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

மேலும் போட்டிகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் இடம்பெற ஏற்பாடாகியுள்ளன. (05)

# கிழக்கு மாகாணத்தில் சமாதான விருது



கிழக்கு மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட சமாதான செயற்பாட்டாளர்கள் மூவருக்கான கௌரவ விருதுகள் வழங்கி வைக்கப்பட்டன.

இதில் திருகோணமலை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட எம். வை. ஹதிகத்துல்லாவுக்கான விருது வழங்கி வைக்கும் நிகழ்வு 05 ஆம் திகதி மாளிகைக்காடு பாபா ரோயல் விடுதியில் இடம்பெற்றது.

கிழக்கு மாகாணத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட சமாதான செயற்பாட்டாளர்களுக்கான 'அமைதி தலைவர்கள் விருது' எனும் விருதே இவ்வாறு வழங்கி வைக்கப்பட்டன.

இந்தச் சமாதானவிருதுக்கு சுமார் 50 இற்கும் மேற்பட்ட விண்ணப்பதாரிகள் விண்ணப்பித்திருந்தனர் இதனை 'ஜிஏஎவ்எஸ்சி' எனும் நிறுவனம் தகுதியான மூவரை மட்டும் தேர்வு செய்தன.

திருகோணாமலை மாவட்டம் சார்பாக மௌலவி எம் ஐ எம் அதியத்துல்லாஹ் தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக சுவிட்ஸர்லாந்து, தென்னாபிரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளின் இலங்கைக்கான தூதுவர்கள் கலந்து கொண்டார்கள். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# சிறப்பு முகாமில் உள்ள மூவரையும் விரைவாக விடுவிக்க மத்திய - மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்கவேண்டும்

## இந்தியாவைக் கோருகிறது ஜனநாயக போராளிகள் கட்சி

முருகன், றொபேட்டயஸ், ஜெயக்குமார் ஆகியோரை விரைந்து சிறப்பு முகாம்களில் இருந்து விடுவித்து தாயகம் திரும்ப ஆவண செய்ய வேண்டும் என இந்திய மத்திய, மாநில அரசுகளை எமது மக்களின் சார்பில் கேட்டுக் கொள்வதாக ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் சி.வேந்தன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

தசாப்தங்கள் கடந்தும் ஈழத்தமிழர்களது நியாயங்களையும் அறைகூவல்களையும் இந்தியா புரிந்துகொள்ள வேண்டும் என தமிழினம் கருதுகிறது. ஈழத்தமிழர்களதும், இந்தியாவினதும் சமூக அரசியல் பொருளாதார பாதுகாப்பு உறவு நிலைகள் பன்னெடுங்கால வரலாற்றுக்கு உரியவை. அந்த உரித்தின் அடிப்படையில் தான் இலங்கை இந்திய ஒப்பந்தம் உருவானது.

இந்தியா தனது பிராந்தியத்தின் நலன் மற்றும் ஈழத்தமிழினத்தின் பாதுகாப்பு, அரசியல் உரிமை என்பவற்றை கருத்தில் கொண்டே தனது முழுமையான பலத்தின் திரட்சியின் அடிப்படையில் தான் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தையும் இலங்கையில் தனது படைத்தரையிறக்கத்தையும் நிகழ்தியிருந்தது.

அதற்கு பின்னரான சிலகசப்பான அசாதாரணமான நிகழ்வுகள் இந்திய ஈழத்தமிழர்களது உறவு நிலைகளில் இடைவெளியினை ஏற்படுத்தி இறுதியில் சிறிபெரும் புத்தூரில் ஏற்படுத்தப்பட்ட துன்பியல் நிகழ்வினை அடுத்து ஈழத்தமிழர்களை இந்தியா முற்றுமுழுதாக கைவிட்டுவிட்டது.

எங்கு எமக்கும் இந்தியாவிற்குமான உறவுநிலை கைவிட்டுபோனதோ அங்கிருந்து தான் அவ்வுறவு நிலை தொடங்கப்பட வேண்டும் என நாங்களும் எமது மக்களும் கருதுகிறோம். சிறீபெரும்புதூரின் வழக்குகளில் தண்டனை பெற்று இந்திய நீதிமன்றங்களினால் விடுவிக்கப்பட்ட ஈழத்தமிழர்களான முருகன், றொபேட்டயஸ், ஜெயக்குமார் ஆகியோர் விரைந்து சிறப்பு முகாம்களில் இருந்து விடுவித்து தாயகம் திரும்ப ஆவண செய்ய வேண்டும் என இந்திய மத்திய, மாநில அரசுகளை எமது மக்களின் சார்பில் கேட்டுகொள்கிறோம் என அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(05 - 100 )

# தம்பலகாமம் பிரதேச செயலக மட்ட 48ஆவது விளையாட்டுப் போட்டி





(ஹஸ்பர ஏ.எச)

தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்குப்பட்ட விளையாட்டு கழகங்களுக்கு இடையிலான 48 ஆவது விளையாட்டு போட்டி 2024.02.17 முதல் 2024.03.05 வரை இடம் பெற்றது. இதில் தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியை உள்ளடக்கிய 42 கழகங்கள் பங்குபற்றின.

மேற்படி விளையாட்டு போட்டியில் உதைப்பந்தாட்டம், கிரிக்கட், எல்லை, கபடி,கரப் பந்து,மெய்வல்லுனர் போட்டி போன்ற போட்டிகள் இடம் பெற்றன. இப்போட்டியில் தெரிவு செய்யப்பட்டவர்கள் மாவட்ட மட்ட போட்டிகளில் பங்கேற்கவுள்ளனர்.

மேற்படி போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான கேடயங்கள் சான்றிதழ்கள் போன்றன செவ்வாய்க்கிழமை இறுதிப் போட்டி நிகழ்வுகளின் போது வழங்கி வைக்கப்பட்டன. இறுதி போட்டியாக முள்ளிப்பொத்தானை புஹாரி நகர் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற போட்டியில் உதைப பந்தாட போட்டி இடம் பெற்றன இதில் ஈச்ச நகர்,சென்றல் கழகங்கள் ஒன்றையொன்று எதிர்த்தாடின. 3:1 என்ற கோல் கணக்கில் சென்றல் கழகம் சம்பியனாக முடி சூடினர்.

மாவட்ட மட்ட போட்டிகளுக்காக வீரர்களை விளையாட்டு உத்தியோகத்தர் கே.எம்.ஹாரிஸ் திறம்பட பயிற்றுவித்து வருகிறார்.

குறித்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி கலந்துசிறப்பித்ததுடன் வெற்றியீட்டிய அணிகள் வீரர்களுக்கான கேடயங்கள் சான்றிதழ்களை வழங்கி வைத்தார்.

இதில் உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன்,பிரதி திட்டமிடல் பணிப்பாளர் ஐ.முஜீப்,நிருவாக உத்தியோகத்தர் உடகெதர,மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் ஏ.எச். விமலசேன,விளையாட்டு உத்தியோகத்தர் கே.எம்.ஹாரிஸ் உப்பட பலர் கலந்து கொண்டனர்.

0(05)

# புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பங்குனி உத்திர பொங்கல்





கிளிநொச்சி மாவட்டத்தின் பிரசித்தி பெற்ற ஆலயங்களில் ஒன்றான கரைச்சி புளியம்பொக்கனை நாகதம்பிரான் ஆலய வருடாந்த பங்குனி உத்திர பொங்கல் திருவிழாவின் முன் ஆயத்த கலந்துரையாடல் புதன்கிழமை ஆலய முன்றிலில் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் முரளிதரன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கண்டாவளை பிரதேச செயலாளர் மற்றும் கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதார பணிப்பாளர் மற்றும் இலங்கை போக்குவரத்து சபை கரைச்சி பிரதேச சபை இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் கிராம சேவையாளர்கள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்

இதன்போது எதிர்வரும் 17.03.2024 அன்றைய தினம் விளக்கு வைப்புடன் ஆரம்பமாகி அன்றைய தினம் பண்டமெடுக்கும் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து 24 ஆம் திகதி வரை பங்குனி உத்திர பொங்கல் நிகழ்வுகள் நடைபெற்ற 24ஆம் திகதி பொங்கல் நிகழ்வுகள் பாரம்பரிய முறைப்படி நடைபெறுவதுடன் அன்றைய தினம் மக்களின் பாதுகாப்புக்கென பொலிஸார் 600 இற்கும் மேற்பட்டவர்கள் காலை தொடக்கம் மறுநாள் வரை மக்களின் பாதுகாப்புக்காக சேவையை வழங்க உள்ளதாகவும் அத்தோடு ஆலய திருவிழா காலங்களில் பொலித்தீன் பாவனை முற்றாக தடை செய்யப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கையில் ஏனைய நடவடிக்கைகள் வழமை போன்று ஆலய நிர்வாகத்தினர் ஏற்பாட்டுக்கு அமைவாக நடைபெறும் என தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. (05-113)

# சமாதானம் ஜனநாயகத்திற்கான செயற்கை தொழில்நுட்பம் என்னும் தலைப்பில் வவுனியா பல்கலையில் ஆய்வுமாநாடு



சமாதானம் மற்றும் ஜனநாயகத்திற்கான செயற்கை தொழில்நுட்பம் மற்றும் டியிற்றல் பரிமாற்றம் எனும் தலைப்பில் வவுனியா பல்கலைக்கழகத்தில் ஆய்வு மாநாடு ஒன்று நேற்று (வியாழக்கிழமை) ஆரம்பமாகியுள்ளதாக பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் ரி.மங்களேஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பாக விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு பம்பைமடுவில் அமைந்துள்ள பல்கலைக்கழக வளாகத்தில் புதன்கிழமை இடம்பெற்றது. இதன்போது தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் -

வவுனியா பல்கலைக்கழகம் மற்றும் ஆசியபசுபிக் சமாதான ஆராய்ச்சி அமைப்பும் இணைந்து 'சமாதானம் மற்றும் ஜனநாயகத்திற்கான செயற்கை தொழில்நுட்பம் மற்றும் டியிற்றல் பரிமாற்றம் என்ற தலைப்பில் இம்முறை ஆய்வு மாநாட்டை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளோம்.

இதில் 250 இற்கும் மேற் ப்பட்ட கல்வியியலாளர்களும், ஆராய்ச்சியாளர்களும், நல்லிணக்கத்துறையில் சிறப்புத்தேர்ச்சி பெற்றவர்களும், ஊடக மற்றும் தொழில்நுப்ப புலமையாளர்கள் ஆகியோர் இந்த மாநாட்டில் கலந்து கொள்கின்றனர்.

இங்கு சர்வதேச நாடுகளை சேர்ந்த புலமையாளர்களின் 200 இற்கும் மேற்ப்பட்ட ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளது. அத்துடன் காலாசாரம் மற்றும் சமாதானத்திற்கான மருத்துவ ரீதியான போக்கு, சமாதானம் மற்றும் ஜனநாயகத்திற்கான செயற்கை தொழில்நுப்பம், சமாதானத்திற்கான கல்வியும் அதன் சவால்களும் என்ற தலைப்பில் குழுக் கலந்துரையாடல்களும் இடம்பெறும்.

இம்மாநாடு நேற்று (வியாழக் கிழமை) ஆரம்பமாகி தொடர்ச்சியாக மூன்று நாள்கள் இடம்பெறும். இம்மாநாட்டில் நல்லிணக்கம் தொடர்பாக சர்வதேச புலமையாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் மூலம் ஒரு நாட்டில் எவ்வாறு சமாதானம் மற்றும் நல்லுறவை ஏற்படுத்த முடியும் என்ற அவர்களது அனுபவங்களையும் பகிரவுள்ளனர்.

எனவே இவ் மாநாட்டின் ஊடாக அது தொடர்பான தெளிவினை பெற்றுக்கொள்ளமுடியும். இந்த விடயத்தில் அக்கறை உடையவர்களை மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு அழைத்து நிற்கின்றோம் எனத் தெரிவித்தார்.

(05-100)

# கற்பிட்டி எச்.பி.எப் இன் மகளீர் தின நிகழ்வு

(சியாஜ்)

கற்பிட்டி மனிதாபிமான சகோதரத்துவ நிறுவனத்தின் (எச்.பி எப்) மகளீர் தின நிகழ்வு இன்று (வெள்ளிக்கிழமை) சர்வதேச மகளீர் தினத்தன்று நிறுவனத்தின் பணிப்பாளர் எம்.எம் ம/ர் தலைமையில் ஐக்கிய நாடுகள் சபையின் இவ்வருடத்தின் கருப்பொருளுக்கு அமைய நிறுவனத்தின் வளாகத்தில் நடைபெற உள்ளது.

இந் நிகழ்வில் கற்பிட்டி பிரதேசத்தில் மனிதாபிமான சகோதரத்துவ நிறுவனத்தின் செயற்திட்டம் ஊடாக செயற்படும் மகளீர் அமைப்புக்களின் நிர்வாக உறுப்பினர்கள் , கற்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கற்பிட்டி பிரதேச செயலக செயலாளர், கற்பிட்டி பிரதேச சபையின் செயலாளர், பெண்கள் சுய முயற்சியாண்மை அபிருத்திக் குழுக்கள் என பலரும் கலந்து சிறப்பிக்க உள்ளமை குறிப்பிடத்தக்கது.

(05)

## பிரிவுபசார நிகழ்வு





(வி.ரி. சகாதேவராஜா)

சம்மாந்துறை வலயக்கல்விப் பணிமனையின் சமூக விஞ்ஞான பாட ஆசிரிய ஆலோசகர் எம்.பி.எம். யூசுப் தனது அறுபதாவது வயதில் ஓய்வு பெற்றதை முன்னிட்டு அங்கு பிரிவுபசார நிகழ்ச்சி புதன்கிழமை நடைபெற்றது.

சம்மாந்துறை வலயக்கல்விப் பணிமனையின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எ.எல்.எ.மஜீட் ஏற்பாட்டில் கல்விசார் உத்தியோகத்தர்கள் நலன்புரி ஒன்றியத்தலைவர் வி.ரி. சகாதேவராஜா தலைமையில் வலயக்கல்விப் பணிமனையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

அங்கு ஆசிரிய ஆலோசகர் யூசுப்பின் சேவைகள் பற்றி பலரும் பாராட்டி பேசினர் .

இறுதியில் அவருக்கு சம்மாந்துறை வலயக்கல்விப் பணிமனை உத்தியோகத்தர்கள் பொன்னாடை போர்த்தி நினைவு பரிசுகளை வழங்கினார்கள்.

பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான மஜீத், யசீர்அறபாத், நிதர்சினி,நிலோபரா உள்ளிட்ட கல்வி சார் உத்தியோகத்தர்கள் கலந்து சிறப்பித்தனர்.

இறுதியில் ஓய்வு பெறும் ஆசிரிய ஆலோசகர் யூசுப் ஏற்புரை வழங்கினார். (05)

## பரிசளிப்பு



(எம்.எச்.எம் சியாஜ்)

புத்தளம் - தெற்கு கோட்டத் துக்குப்பட்ட கடையாமோட்டை முஸ்லிம் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை)யில் தரம் ஆறு தொடக்கம் பதினொன்று வரை மாணவர்களுக்கான 2023 ஆம் கல்வி ஆண்டின் பரிசளிப்பு விழா அண்மையில் பாடசாலையின் ரிபிஎஸ் மண்டபத்தில் பாடசாலையின் அதிபர் எம்.எச்.எம். தௌபீக் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளரும், முந்தல் மதுரங்குளி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவருமான ஏ.எச்.எம். ஹாரூன் விஷேட அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் பாடசாலையின் ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்ததோடு, இதன்போது முதலாம், இரண்டாம், மூன்றாம் நிலைகளைப் பெற்ற மாணவர்களுக்கு விஷேட அதிதி மற்றும் அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்களால் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

குறித்த நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 08.03.2024இல் வெளியிடப்பெற்றது.